# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## பெண்களின் வலுவூட்டல்

**பெண்கள் பற்றிய வலுவூட்டலுக்கு ஏற்பாடுசெய்வதற்கும்; பெண்களின் முன்னேற்றம் மற்றும் வலுவூட்டல் மீதான தேசியக் கொள்கையை வகுத்தமைப்பதற்கும் நடைமுறைப்படுத்துவதற்கும்; பெண்கள் பற்றிய தேசிய ஆணைக்குழுவொன்றைத் தாபிப்பதற்கும்; பெண்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான பொறிமுறைகளைத் தாபிப்பதற்கும் மற்றும் அத்தகைய உரிமைகளின் மீறுகைகளுக்கெதிராக குற்றவழக்குத்தொடுப்பதற்கும்; அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங் களுக்கு ஏற்பாடுசெய்வதற்குமானதொரு சட்டமூலம்**

---

*மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூகவலுப்படுத்துகை அமைச்சர் அவர்களால் 2024, மே மாதம் 07 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது*

*(2024, மாச்சு மாதம் 07 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

---

[**254 ஆம் சட்டமூலம்**]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 66.00** **தபாற் செலவு : ரூபா 150.00**

*இச்சட்டமூலத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# பெண்களின் வலுவூட்டல்

*ச.வ.ஓ. 49 /2023*

**பெண்கள் பற்றிய வலுவூட்டலுக்கு ஏற்பாடுசெய்வதற்கும்; பெண்களின் முன்னேற்றம் மற்றும் வலுவூட்டல் மீதான தேசியக் கொள்கையை வகுத்தமைப்பதற்கும் நடைமுறைப்படுத்துவதற்கும்; பெண்கள் பற்றிய தேசிய ஆணைக்குழுவொன்றைத் தாபிப்பதற்கும்; பெண்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான பொறிமுறைகளைத் தாபிப்பதற்கும் மற்றும் அத்தகைய உரிமைகளின் மீறுகைகளுக்கெதிராக குற்றவழக்குத்தொடுப்பதற்கும்; அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடுசெய்வதற்குமானதொரு சட்டம்.**

*முன்னுரை*

*மனித உரிமைகள் பற்றிய அனைத்துலக வெளிப்படுத்துகையானது ஓரங்காட்டாமை பற்றிய கோட்பாட்டை உறுதிப்படுத்துகின்றதாதலாலும் எல்லா மனிதர்களும் சுதந்திரமாக பிறந்தவர்கள் எனவும் கௌரவம் மற்றும் உரிமைகளில் சமமானவர்கள் எனவும் பால்நிலை அடிப்படையிலான வேறுபாடுகள் உட்பட, வேறுபாடின்றி எல்லா உரிமைகளுக்கும் சுதந்திரங்களுக்கும் உரித்துடையவர்களாவர் எனவும் பிரகடனப்படுத்துகின்றதாதலாலும்:*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பானது பெண்களின் முன்னேற்றத்துக்கான விசேட ஏற்பாடுகள், சட்டத்தினாலும், துணைநிலைச் சட்டவாக்கத்தினாலும் அல்லது நிறைவேற்றுத்துறை நடவடிக்கையினாலும் ஆக்கப்படுவதனை அங்கீகரிக்கின்றதாதலாலும்;*

*அத்துடன் தேசிய மட்டத்தில் தொழிற்படும் தேசிய பெண்கள் ஆணைக்குழுவைத் தாபித்தலானது பெண்களுக்கான வலுவூட்டலை உறுதிப்படுத்துவதற்கான பயனுள்ள பொறிமுறையாக இருக்குமென்பதாதலாலும்:*

*ஆகவே இப்பொழுது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-*

**1.** இச்சட்டம், 2024 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, பெண்களின் வலுவூட்டல் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்

**2.** இச்சட்டத்தின் குறிக்கோள்கள் பின்வருவனவாகவிருத்தல் வேண்டும் - சட்டத்தின் குறிக்கோள்கள்

(அ) அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கமைய பெண்களின் உரிமைகளை பேணிக்காப்பதற்கு பொறிமுறைகளை அறிமுகப்படுத்துவதன்மூலம் பெண்களின் முன்னேற்றம் மற்றும் வலுவூட்டலுக்கான ஏற்பாடுகளைச் செய்தல்;

(ஆ) பெண்களுக்கெதிரான எல்லா வகையினவுமான ஓரங்காட்டுகையை ஒழித்தல் மீதான சமவாயம் மற்றும் ஏற்புடையாகும் சட்டங்களின் நியதிகளின்படி பெண்கள் தொடர்பாக இலங்கை அரசாங்கத்தினால் பொறுப் பேற்கப்பட்ட கடப்பாடுகளுக்கு பயன்கொடுப்பதற்கான பொறிமுறைகளை அறிமுகப்படுத்தல்;

(இ) பெண்கள் பற்றிய வலுவூட்டலை வசதிப்படுத்துவதற்கும் உறுதிப்படுத்துவதற்கும் வேலைக்கட்டமைப்பொன்றை அபிவிருத்திசெய்தலும் எல்லாத் துறைகளிலுமுள்ள எல்லா மட்டங்களிலும் அப்போதைக்குள்ள இடையீடு களினால் பெண்கள் பற்றிய முன்னேற்றம் மற்றும் வலுவூட்டலுக்கு தேசிய கொள்கையை வகுத்தமைத்தலும் நடைமுறைப்படுத்தலும்;

(ஈ) பால்நிலை மற்றும் பாலியல் நாட்டம் மீதான அடிப்படையிலான ஓரங்காட்டுகை பற்றிய எல்லா வடிவங்களிலிருந்தும் பெண்களைப் பாதுகாத்தல்;

(உ) பெண்களுக்கெதிரான பாராபட்சம், ஓரங்காட்டுகை, பாலியல் தொல்லை மற்றும் வன்முறையைத் தடுத்தல் மற்றும் அது தொடர்பில் செயல்கள் அல்லது செய்யாமை கள் பற்றி குற்றவழக்குத் தொடுப்பதற்கும் தண்டனை யளிப்பதற்குமான வழிமுறைகளைப் பலப்படுத்தல்;

(ஊ) பெண்களுக்கெதிரான பாரபட்சத்தை தடுப்பதற்கு ஏற்பாடுசெய்வதற்கென முன்னுரிமையளிக்கின்ற

கருமமொன்றாக சட்டச் சீர்திருத்தங்களுக்கு பரிந்துரைகளைச் செய்தல் மற்றும் பெண்களை வலுவூட்டல்;

(எ) பெண்களுக்கான சமத்துவம் மற்றும் நீதியை உணர்வதனை மேம்படுத்தலும் அவற்றை உறுதிப்படுத்துதலும், நிருவாகத்துடன் நீதி சம்பந்தப்பட்ட எல்லா வழிமுறைகளிலும் பொறிமுறைகளிலும் பெண்களின் பங்குபற்றுகையை இயன்றளவுவரை உறுதிப்படுத்துவதற்கான வழிமுறைகளை எடுத்தலும் அரசாங்கத்தினுள் ஒவ்வொரு மட்டத்திலும் முடிபு எடுக்கும் கட்டமைப்புகள் மற்றும் பதவிகளில் பெண்களின் சம பிரதிநிதித்துவமும்;

(ஏ) அங்கவீனத்துடனான பெண்களுக்கு விசேடமாக கருத்திற்கொண்டுள்ள பொருளாதார வலுவூட்டலை உறுதிப்படுத்துதல்; அத்துடன்

(ஐ) பெண்கள் வலுவூட்டல் பற்றிய எல்லா அம்சங்கள் தொடர்பிலும் பொது கல்வி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்;

பாகம் I

## பெண்கள் பற்றிய தேசிய ஆணைக்குழுவைத் தாபித்தல்

*பெண்கள் பற்றிய தேசிய ஆணைக் குழுவைத் தாபித்தல்*

**3.** (1) (இதனகத்துப்பின்னர் "ஆணைக்குழு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) பெண்கள் பற்றிய தேசிய ஆணைக்குழு என அழைக்கப்படவேண்டியதும் அறியப்படவேண்டியதுமான ஆணைக்குழுவொன்று தாபிக்கப்படுதல் வேண்டும்.

(2) ஆணைக்குழுவானது, (1) ஆம் உட்பிரிவினால் அதற்கு குறித்தளிக்கப்பட்ட பெயரினால் கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாகவிருத்தல் வேண்டும் என்பதுடன் இடையறா வழியுரிமையையும் பொது இலச்சினையொன்றையும் கொண்டிருத்தல் வேண்டும்; அத்துடன் அத்தகைய பெயரில் வழக்குத் தொடுக்கலாம் அதற்கு எதிராக வழக்குத்தொடுக்கவும்படலாம்.

**4.** (1) சனாதிபதி ஆணைக்குழுவுக்கு ஏழு உறுப்பினர்களை (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய நியமித்தல் வேண்டும். அவர்களுள் ஆகக் குறைந்தது ஐந்து உறுப்பினர்கள் பெண்களாக விருத்தல் வேண்டும். ஆணைக் குழுவின் அமைப்பு

(2) சனாதிபதி பின்வருவனவற்றிலிருந்து விதப்புரைகளைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்:-

(அ) ஆணைக்குழுவின் ஐந்து உறுப்பினர்களை நியமிப்ப தற்காக அரசியலமைப்பு பேரவையிடமிருந்து; அத்து டன்

(ஆ) ஆணைக்குழுவின் இரண்டு உறுப்பினர்களை நிய மிப்பதற்காக சாபநாயகரினால் நியமிக்கப்பட்ட பாராளுமன்ற பெண்கள் குழுவிடமிருந்து.

(3) அரசியலமைப்பு பேரவை மற்றும் பாராளுமன்ற பெண்கள் குழு (2) ஆம் உட்பிரிவின்கீழ் அவற்றின் விதப்புரைகளைச் செய்வதில் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளை உரிய கருத்தில் கொள்ளுதல் வேண்டுமென்பதுடன் சட்டம் அல்லது சட்டவாக்கம், தொழிற்சங்கவாதம், முகாமைத்துவம் மற்றும் நிருவாகம், பொருளாதார அபிவிருத்தி, சுகாதாரம், கல்வி, பெண்கள் வலுவூட்டல் ஆகிய துறைகளில் எண்பிக்கப்பட்ட அறிவு, அனுபவம் மற்றும் திறமை என்பவற்றில் பொது வாழ்வில் தம்மை மேன்மையடையச்செய்துள்ள அல்லது பெண்களில் தொழில் இயல்திறனை அதிகரிப்பதற்கு ஈடுபாடுகொண்டுள்ளவர்களுமான ஆட்களிடையேயிருந்து அத்தகைய விதப்புரைகளைச் செய்தல் வேண்டும்.

(4) அரசியலமைப்புப் பேரவையும் பாராளுமன்ற பெண்கள் குழுவும் இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தேதியிலிருந்து அல்லது ஆணைக்குழுவின் உறுப்பாண்மையில் வெற்றிடமொன்று இடம்பெற்ற தேதியிலிருந்து ஒரு மாதத்தினுள் (2) ஆம் உட்பிரிவின் கீழ் விதப்புரைகளைச் செய்தல் வேண்டும்.

(5) தவிசாளர் உட்பட ஆகக்குறைந்தது மூன்று உறுப்பினர்கள் முழுநேர உறுப்பினர்களாக நியமிக்கப்படுதல் வேண்டும்.

ஆணைக்குழுவின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகள்

**5.** ஆணைக்குழுவானது, இச்சட்டத்தின் குறிக்கோள்களை எய்தும் நோக்கத்துக்காக பின்வரும் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளைப் பிரயோகித்தல், புரிதல் மற்றும் நிறைவேற்றுதல் வேண்டும்:-

(அ) பாகம் II இன் ஏற்பாடுகளின் நியதிகளின்படி பெண்களின் உரிமைகளின் மீறுகை அல்லது நிகழவுள்ள மீறுகைபற்றி விசாரணை செய்தலும் புலனாய்வு செய்தலும் முறைப்பாடுகளைப் பெற்றுக்கொள்ளுதலும்;

(ஆ) ஏதேனும் நீதிமன்றத்தின் அனுமதியுடன் அத்தகைய நீதிமன்றத்தின் முன்னர் முடிவுறாதுள்ள பெண்களின் உரிமையின் மீறுகை அல்லது நிகழவுள்ள மீறுகை தொடர்பான எவையேனும் வழக்குநடவடிக்கைகளில் இடையீடுசெய்தல்;

(இ) இச்சட்டத்தின் 6 ஆம் பிரிவின் நியதிகளின்படி பெண்களின் முன்னேற்றம் மற்றும் வலுவூட்டல் பற்றி தேசியக் கொள்கையை வகுத்தமைத்தல்;

(ஈ) (இதனகத்துப்பின்னர் "வேலைக்கட்டமைப்பு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) பெண்களின் வலுவூட்டலை வசதிப்படுத்துவதற்கும் மற்றும் உறுதிப்படுத்துவதற்கும் பெண்களின் முன்னேற்றம் மற்றும் வலுவூட்டல் பற்றிய தேசியக் கொள்கையுடன் இணங்கியொழுகுவதற்கு வேலைக்கட்டமைப்பொன்றை விருத்தி செய்தல்;

(உ) பெண்களின் உரிமைகள் பற்றிய மீறுகை அல்லது நிகழவுள்ள மீறுகை தொடர்பில் பகிரங்க விசாரணைகளை நடாத்துதல்;

(ஊ) பெண்களின் உரிமைகள் பற்றிய மீறுகை அல்லது நிகழவுள்ள மீறுகை தொடர்பில் அதன் சொந்த மனு பற்றிய ஏதேனும் தகுதிவாய்ந்த நீதிமன்றத்தில் வழக்குகளைத் தொடுத்தல்;

(எ) அந்நீதிமன்றத்தினால் ஆற்றுப்படுத்தப்பட்ட பெண்களுக்கான உரிமைகள் தொடர்பில் ஏதேனும் கருமம் தொடர்பில் உயர் நீதிமன்றத்தினால் அல்லது வேறு ஏதேனும் நீதிமன்றத்தினால் பணிக்கப்படக் கூடியவாறான அத்தகைய நடவடிக்கைகளை எடுத்தல்;

(ஏ) இச்சட்டத்தின்கீழ் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியின்கீழ் ஆணைக்குழுவில் உரித்தாக்கப்பட்ட ஏதேனும் பணியை புரியும் நோக்கத்துக்காக எவரேனும் ஆளிடமிருந்து எவையேனும் தகவல்களை அல்லது அறிக்கைகளை வேண்டுகோள்விடுத்தல் அல்லது கோருதல்;

(ஐ) பெண்கள் உரிமைகள் தொடர்பில் அரசியலமைப்பின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுகுதலை உறுதிப்படுத்தும் நோக்குடன் முறைப்பாடுகளை புலனாய்வு செய்தலும் விசாரணை செய்தலும் பெண்களின் உரிமைகள் பற்றி மதிப்பு மற்றும் அவதானிப்பை ஊக்குவித்தலும்;

(ஒ) ஆணைக்குழுவினால் முறைப்பாடுகளைக் கையாள்வது தொடர்பில் பொதுக்கொள்கைகள் மற்றும் செயல்முறைகளை பின்பற்றுவதற்கும் ஒத்துழைப்பை ஊக்குவிப்பதற்கென அரச நிறுவனங்கள், குழுக்கள் அல்லது அதிகாரசபைகளுடன் இணைதலும், இணையுடாடுதலும்;

(ஓ) ஆணைக்குழுவின் பிராந்திய மற்றும் மாகாண அலுவலகங்களை திறத்தல்;

(ஔ) ஏதேனும் கொள்வனவு, மானியக்கொடை, கொடையின் பயனைக்கொண்டு அல்லது வேறுவகையாக ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளுதல், எடுத்தல் மற்றும் வைத்திருத்தல் அத்துடன் அத்தகைய ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தை விற்பனைசெய்தல், ஈடுவைத்தல், குத்தகைக்குவிடுதல், அளித்தல், உரித்து

மாற்றல், விருப்பாவண நன்கொடையளித்தல், சாட்டுதல் செய்தல், கொடுத்துமாற்றுதல், கையுதிர்த்தல்;

(க) பெண்களின் உரிமைகள் மற்றும் பெண்களின் உரிமைகள் தொடர்பாக சர்வதேசரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட நெறிகள் சம்பந்தமாக விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும் அவை பற்றிய தகவல்களை பரப்புவதற்கும் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்;

(ங) ஒன்றில் அத்தகைய பாராபட்சம் பற்றி முறைப் பாடொன்றைப் பெறுவதன் மீது அல்லது அதன் சொந்தப் பிரேரணையின் மீது, இதனகத்துப்பின்னர் ஏற்பாடுசெய்யப்பட்ட ஏற்பாடுகளுக்கிணங்க பாரபட்சத்துக்கமைய மத்தியஸ்தத்துக்காக எவரேனும் பெண்களை ஆற்றுப்படுத்துதல்;

(ச) பின்வருவனபற்றி அரசாங்கத்துக்கும் அமைச்சருக்கும் விதப்புரைகளைச் செய்தல் -

(i) உள்நாட்டுச் சட்டங்களும் கொள்கைகளும் நிருவாகச் செயன்முறைகளும் பெண்களின் உரிமைகள் மீதான சர்வதேசரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட நெறிகள் மற்றும் நியமங்களுக்கிணங்கவுள்ளன என உறுதிப்படுத்துவதற்கு எடுக்கப்படவேண்டிய வழிமுறைகள்; அத்துடன்

(ii) பெண்களின் உரிமைகளுக்கு மதிப்பளிப்பதற்காக, அவற்றை மேம்படுத்துவதற்காக, அவற்றைப் பாதுகாப்பதற்காக மற்றும் அவற்றை பூர்த்திசெய்வதற்காக தேவைப்படுத்தப்பட்ட விதித்துரைக்கப்படவேண்டிய ஒழுங்குவிதிகள், சட்டவாக்கம், நிருவாகப் பணிப்புரைகள் மற்றும் நடவடிக்கைமுறைகளை வகுத்தமைத்தல்;

(ஞ) பெண்களின் உரிமைகள் பற்றி சட்டவாக்கம், கொள்கைகள் மற்றும் செயன்முறைகள் பற்றிய தாக்கத்தை மதிப்பீடு செய்தல் மற்றும் பாரபட்சம்

அல்லது வன்முறைக்கமைய பெண்களின் முறைப்பாடுகளைச் செய்கின்ற குழுக்களுக்கிடையில் ஒத்துழைப்பை ஊக்குவிப்பதற்கென இயைபான குழுக்களுக்கு விதப்புரைகளைச் செய்தல்;

(ட) இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளினால் அடையாளங்காணப்பட்ட பல்வேறுபட்ட வகுதியினரும் அந்தஸ்தினருமான பெண்களுக்கான சமத்துவம் மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கைகளை எடுத்தல்;

(ண) கொள்கைகளும் செயன்முறைகளும் பெண்களின் உரிமைகளுடன் தொடர்பானவையாக இருக்கும் அளவுவரை அக்கொள்கைகளுக்கும் செயன்முறைகளுக்கும் தனிப்பட்ட ஆட்களினாலான மற்றும் வேறு அரசசார்பற்ற நிறுவனங்களினாலான அமைந்தொழுகுகையை கண்காணித்தலும் மதிப்பீடு செய்தலும்;

(த) பெண்களின் உரிமைகளின் மேம்படுத்துகை மற்றும் பாதுகாப்பை முன்னெடுத்துச் செல்வதில் ஆராய்ச்சியை மேற்கொள்ளல் மற்றும் பெண்களின் உரிமைகள் தொடர்பான கருமங்கள் சம்பந்தமாக விழிப்புணர்வை மேம்படுத்தலும் கல்வியை வழங்குதலும்;

(ந) உள்நாட்டு மூலங்களிலிருந்தாயினுஞ்சரி அல்லது வெளிநாட்டு மூலங்களிலிருந்தாயினுஞ்சரி மானியக் கொடைகள், கொடைகள் அல்லது நன்கொடைகளைப் பெறுதல்:

ஆயின் ஆணைக்குழுவானது, எல்லா வெளிநாட்டு மானியக்கொடைகள், கொடைகள் அல்லது நன்கொடைகள் தொடர்பிலும் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் எழுத்திலான முன்னங்கீகாரத்தைப் பெறுதல் வேண்டும்;

(ப) இச்சட்டத்தின்கீழ் ஆணைக்குழுவுக்கு முறைப்பாடொன்றைச் செய்வதில் இன்னலுற்ற ஆளொருவரினால் நியாயமான முறையில் உறப்பட்டிருக்கக்கூடிய செலவுகளை எதிர்கொள்வதற்கு போதியதாகவுள்ளது என கருதப்படக்கூடியவாறான அத்தகைய பணத்தொகையை அத்தகைய ஆளுக்கு அதன் பூரண தற்றுணிபில் அளித்தல்;

(ம) இச்சட்டத்தின்கீழ் எக்கருமங்களுக்கு விதிகள் ஆக்கப்படுவதற்கு தேவைப்படுத்தப்படுகின்றதோ அக்கருமங்கள் தொடர்பில் விதிகளை ஆக்குதல்; அத்துடன்

(ய) இச்சட்டத்தின் குறிக்கோள்களை எய்துவதற்கு உசிதமானதாகவிருக்கக்கூடியவாறு அத்தகைய வேறு எல்லாச் செயல்களையும் செய்தல்.

பெண்கள் முன்னேற்றம் மற்றும் வலுவூட்டுகை பற்றி தேசியக் கொள்கையை வகுத்தமைத்தல்

**6.** (1) ஆணைக்குழு இச்சட்டத்தின் குறிக்கோள்களை எய்துவதற்கு நடவடிக்கைமுறைகள் மற்றும் பொறிமுறைகள் உள்ளடங்கியதான (''தேசியக் கொள்கை'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) பெண்களின் முன்னேற்றம் மற்றும் வலுவூட்டல் பற்றிய தேசியக் கொள்கை பற்றிய வரைவை வகுத்தமைத்தல் வேண்டும்.

(2) (அ) ஓராம் உட்பிரிவின் நியதிகளின்படி ஆணைக்குழுவினால் தேசியக்கொள்கை வரைவொன்றை வகுத்தமைத்தலின் மேல், அமைச்சர் தேசிய கொள்கை வரைவுடன் திருப்திப்படுகின்றதன் மீது அதன் அங்கீகாரத்துக்கென அமைச்சரவைக்கு அத்தகைய தேசியக் கொள்கை வரைவை சமர்ப்பித்தல் வேண்டும்.

(ஆ) அமைச்சரவை (அ)என்னும் பந்தியின்கீழ் அமைச்சரவைக்கு அனுப்பப்பட்ட தேசியக் கொள்கை வரைவை மீளாய்வு செய்யலாமென்பதுடன் அத்தகைய தேசியக் கொள்கைக்கு அங்கீகாரம் அளிப்பதற்கு முன்னர் அதற்கான திருத்தங்களை எடுத்துச்சொல்லலாம்.

(3) இரண்டாம் உட்பிரிவின்கீழ் அமைச்சரவையினால் தேசியக் கொள்கையின் அங்கீகாரத்தின் மேல், அமைச்சர் வர்த்தமானியில் அத்தகைய தேசியக் கொள்கையை வெளியிடச் செய்தல் வேண்டுமென்பதுடன் அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது

அதன்கண் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய தேதிக்கு பிந்தாமல் நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(4) அமைச்சர் அமைச்சரவையின் அங்கீகாரத்திலிருந்து ஒரு மாதத்தினுள் அதன் அங்கீகாரத்துக்கென பாராளுமன்றத்துக்கு முன்னர் அத்தகைய தேசியக் கொள்கையை இடுதல் வேண்டும்.

(5) ஒவ்வொரு இயைபான அதிகாரசபையும் அவ்வாறு அங்கீகரிக்கப்பட்ட தேசியக் கொள்கையுடன் இணங்கியொழுகுகின்றது என்பதனை உறுதிப்படுத்துதல் ஆணைக்குழுவின் கடமையாதல் வேண்டும்.

(6) பாராளுமன்றம் (4) ஆம் உட்பிரிவின்கீழ் அங்கீகாரத்துக்கென தேசியக் கொள்கையுடன் திருப்திப்படுகின்றவிடத்து, அது தேசியக் கொள்கையைத் திருத்துவதற்காக அதன் விதப்புரைகளைச் செய்தல் வேண்டும்.

(7) தேசியக் கொள்கைக்கான அத்தகைய விதப்புரைகளை சேர்க்கப்படுவதனைச் செய்வித்து அத்தகைய திருத்தங்களுக்கு அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் பாராளுமன்றத்துக்கு தேசியக் கொள்கையை மீளச்சமர்ப்பித்தல் அமைச்சரின் கடமையாதல் வேண்டும்.

(8) பாராளுமன்றம் தேசியக் கொள்கையை அங்கீகரிக்காதுவிடின், அத்தகைய அங்கீகாரம் மறுக்கப்பட்டமை பற்றிய அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

உறுப்பினர்களின் பதவிக்காலம்

**7.** ஆணைக்குழுவின் ஒவ்வொரு உறுப்பினரும், இறப்பின் மூலம், சட்டத்தின் நடைமுறைமூலம், பதவி விலகுகையின்மூலம் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுவதன்மூலம் அவர் முன்னரே பதவியை வறிதாக்கினாலொழிய, நான்கு ஆண்டு காலமொன்றுக்கு பதவிவகித்தல் வேண்டுமென்பதுடன் தொடர்ச்சியாக அல்லது வேறு வகையாக எவையேனும் இரண்டு அதிகபட்ச பதவிக்காலமொன்றுக்கு அமைய மீள நியமிக்கப்படுவதற்கு தகவுடையவராதலும் வேண்டும்.

ஆணைக்குழுவின் தவிசாளர்

**8.** (1) சனாதிபதி, அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையின்மீது, ஆணைக்குழுவின் தவிசாளராகவிருப்பதற்கு பெண் உறுப்பினர்களினுள் ஒருவரை நியமித்தல் வேண்டும்.

(2) தவிசாளர், சனாதிபதிக்கு முகவரியிட்டனுப்பப்பட்ட கடிதத்தின் மூலம் அவரது பதவியிலிருந்து விலகலாம் என்பதுடன் அத்தகைய பதவிவிலகுகை எத்தேதியன்று அது சனாதிபதியினால் ஏற்றுக்கொள்ளப்படுகின்றதோ அத்தேதியிலிருந்து பயனுறுதலும் வேண்டும்.

(3) சனாதிபதி, அதற்காக குறித்தளிக்கப்பட்ட காரணங்களுக்காக 9 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய தவிசாளரின் பதவியிலிருந்து தவிசாளரை அகற்றலாம்.

(4) இரண்டாம் மற்றும் (3) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கமைய, தவிசாளரின் பதவிக்காலம் ஆணைக்குழுவின் அவரது உறுப்பாண்மைக் காலப்பகுதியாகவிருத்தல் வேண்டும்.

(5) தவிசாளர், சுகவீனம், வேறு உடற்றகுதியீனம், இலங்கையில் இல்லாமை காரணமாக அல்லது வேறு ஏதேனும் காரணத்துக்காக அவரது பதவியின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளைப் பிரயோகிப்பதற்கு, புரிவதற்கு மற்றும் நிறைவேற்றுவதற்கு தற்காலிகமாக இயலாதவராகவிருக்கின்றவிடத்து, சனாதிபதி, வேறு எவரேனும் பெண் உறுப்பினரை உறுப்பினர் ஒருவராக அவரது வழமையான கடமைகளுக்கு மேலதிகமாக தவிசாளராக செயலாற்றுவதற்கு நியமிக்கலாம்.

ஆணைக்குழுவின் உறுப்பினரொருவராகவிருப்பதற்கான தகைமையீனங்கள்

**9.** ஆளொருவர் பின்வரும் சந்தர்ப்பங்களில் ஆணைக்குழுவின் உறுப்பினரொருவராக நியமிக்கப்படுவதற்கு அல்லது தொடர்ந்திருப்பதற்கு தகைமையற்றவராதல் வேண்டும் –

(அ) அத்தகைய ஆள் பாராளுமன்றத்தின், ஏதேனும் மாகாணசபையின் அல்லது ஏதேனும் உள்ளூரதிகார சபையின் உறுப்பினரொருவராகவிருந்தால் அல்லது வந்தால்;

(ஆ) இலங்கைப் பிரசையொருவராக இல்லாதிருந்தால் அல்லது இலங்கைப் பிரசையொருவராக இல்லாதொழிந்தால்;

(இ) தகுதிவாய்ந்த நியாயாதிக்க நீதிமன்றமொன்றினால் கடனிறுக்க வகையற்றவரொருவராக தீர்ப்பளிக்கப்பட்டிருந்தால் அல்லது தீர்ப்பளிக்கப்பட்டால்;

(ஈ) சுகவீனம் அல்லது வேறு உள அல்லது உடற்றகுதியீனம் காரணமாக பதவியில் தொடர்வதற்கு தகுதியற்ற வராகவிருந்தால் அல்லது தகுதியற்றவராக வந்தால்;

(உ) தகுதிவாய்ந்த நியாயாதிக்க நீதிமன்றமொன்றினால் சித்தசுவாதீனமற்றவரென வெளிப்படுத்தப்பட்டி ருந்தால் அல்லது வெளிப்படுத்தப்பட்டால்;

(ஊ) இலங்கையில் அல்லது வேறு ஏதேனும் நாட்டில் உள்ள ஏதேனும் நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட மறியற்றண்டனைத் தீர்ப்பொன்றை அனுபவித் திருந்தால் அல்லது அனுபவித்துக் கொண்டிருந்தால்; அல்லது

(எ) ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவராக அவர் நியமிக்கப்பட்ட முன்னைய காலமொன்றின் போது பதவியிலிருந்து அகற்றப்பட்டிருந்தால்.

உறுப்பினர்களை பதவியிலிருந்து அகற்றுதல் மற்றும் அவர்களின் பதவிவிலகுகை

**10.** (1) ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவரின் பதவி பின்வரும் சந்தர்ப்பங்களில் வறிதாதல் வேண்டும் -

(அ) அத்தகைய உறுப்பினரின் இறப்பின் மேல்;

(ஆ) அத்தகைய உறுப்பினர் சனாதிபதிக்கு முகவரியிட்ட னுப்பப்பட்ட கடிதத்தின் மூலம் அத்தகைய பதவி யிலிருந்து விலகுவதன் மேல்; அல்லது

(இ) அத்தகைய உறுப்பினர் 9 ஆம் பிரிவில் குறித்துரைக் கப்பட்ட எவையேனும் ஏதுக்களின்மீது அத்தகைய பதவியிலிருந்து அகற்றப்படுவதன் மேல்.

(2) சனாதிபதி, (சமுகமளிக்காதோர் உட்பட) பாராளுமன்ற உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையின் பெரும்பான்மை யொன்றினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானமொன்றின் மூலம் ஆதரவளிக்கப்பட்டதாகவும் பாராளுமன்றத்திற்கான பிரேரணை ஒன்றின் பின்னரும் எண்பிக்கப்பட்ட துர்நடத்தை அல்லது (1) ஆம் உட்பிரிவின்கீழான இயலாமை என்ற ஏதுவின்மீது பதவியிலிருந்து ஆணைக்குழுவின் உறுப்பினரொருவரை அகற்றலாம்:

ஆயின் எவ்வாறாயினும், அத்தகைய பிரேரணை ஒன்றை முன்வைப்பதற்கான தீர்மானமெதுவும், அத்தகைய தீர்மானம் பற்றிய அறிவித்தல் சார்த்தப்பட்ட துர்நடத்தை அல்லது இயலாமை பற்றிய முழுமையான விபரங்களைக் குறிப்பிட்டும் பாராளுமன்றத்தின் உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையின் மூன்றில் ஒரு பங்கிற்குக் குறையாதவர்களினால் கையொப்பமிடப்பட்டாலொழிய சபாநாயகரினால் ஏற்றுக்கவனிக்கப்படுதலோ அல்லது பாராளுமன்றத்தின் ஒழுங்குப் பத்திரத்தில் இடப்படுதலோ ஆகாது.

(3) உயர் நீதிமன்றத்தின் அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நீதிபதியொருவரை அகற்றுவதற்கு பாராளுமன்றத்திற்கான பிரேரணை ஒன்றை முன்வைத்து நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைமுறை, ஆணைக்குழுவின் உறுப்பினரொருவரை அகற்றுவதற்கு பாராளுமன்றத்திற்கான பிரேரணை ஒன்றை முன்வைத்தல் மற்றும் நிறைவேற்றுதல் தொடர்பான எல்லா அம்சங்களிலும் ஏற்புடையதாதல் வேண்டும்.

ஆணைக்குழுவின் கூட்டங்கள்

**11.** (1) ஆணைக்குழுவின் தவிசாளர், சமுகமளித்திருப்பின் ஆணைக்குழுவின் எல்லாக் கூட்டங்களுக்கும் தலைமைதாங்குதல் வேண்டும். தவிசாளர் அத்தகைய ஏதேனும் கூட்டத்துக்கு வருகை தராதபோது, சமுகமளித்திருக்கும் உறுப்பினர்கள் அத்தகைய கூட்டத்துக்கு தலைமைதாங்குவதற்கு அவர்களுள் இருந்து ஒருவரை தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

(2) ஆணைக்குழுவின் ஏதேனும் கூட்டத்துக்கான கூட்டநடப்பெண் நான்கு உறுப்பினர்களாகவிருத்தல் வேண்டும்.

(3) ஆணைக்குழுவின் கூட்டமொன்று ஒன்றில் -

(அ) கூட்டத்துக்காக நியமிக்கப்பட்ட இடத்தில், தேதியில் மற்றும் நேரத்தில் கூடியுள்ள கூட்டநடப்பெண் ஒன்றை அமைத்துருவாக்குகின்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையினால்; அல்லது

(ஆ) பங்குபற்றுகின்றவர்களும் கூட்டநடப்பெண் ஒன்றை அமைத்துருவாக்குகின்றவர்களுமான எல்லா உறுப்பினர்களும் கூட்ட காலப்பகுதியின்போது பங்குபற்றுகின்ற ஒவ்வொரு உறுப்பினரையும் ஒரே

நேரத்தில் பார்க்கவும் கேட்கவும் முடியுமான கட்புல செவிப்புல தொடர்பாடல் வழிவகைகளினால்,

நடாத்தப்படலாம்.

(4) ஆணைக்குழு, ஆணைக்குழுவின் கூட்டங்கள் மற்றும் அத்தகைய கூட்டங்களில் அலுவல்களை கொண்டுநடாத்துதல் சம்பந்தமான நடவடிக்கைமுறையை ஒழுங்குபடுத்தலாம்.

(5) ஆணைக்குழுவின் ஏதேனும் கூட்டத்தில் முடிபுக்கான எல்லாக் கேள்விகளும் சமுகமளித்திருக்கும் உறுப்பினர்களின் பெரும்பான்மை வாக்குகளினால் முடிபுசெய்யப்படுதல் வேண்டும். வாக்குகள் சமமாகவிருக்கும்பட்சத்தில், தலைமைதாங்கும் உறுப்பினர் அறுதியிடும் வாக்கொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

உறுப்பினர்களின் ஊதியம்

**12.** ஆணைக்குழுவின் உறுப்பினர்களின் சம்பளங்கள் பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் திரட்டு நிதியத்தின்மீது பொறுப்பிக்கப்படுதலும் வேண்டும்.

உறுப்பினர்கள் ஏதேனும் அக்கறையை வெளிவிடுதல் வேண்டும்

**13.** ஆணைக்குழுவினால் ஏதேனும் கருமத்தின் மீது எடுக்கப்படவேண்டிய ஏதேனும் முடிபில் நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் அக்கறைகொண்டுள்ள உறுப்பினர் ஒருவர், அத்தகைய முடிபு எடுக்கப்படுகின்ற ஆணைக்குழுவின் கூட்டத்தில் அத்தகைய அக்கறையின் தன்மையை வெளிவிடுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய வெளிவிடுகை ஆணைக்குழுவின் கூட்டங்களின் நிகழ்ச்சிக்குறிப்புகளில் பதியப்படுதலும் வேண்டும்; அத்துடன் அத்தகைய உறுப்பினர் அக்கருமம் சம்பந்தமாக ஆணைக்குழுவின் ஏதேனும் கலந்துரையாடல் அல்லது முடிபில் பங்குபற்றுதலாகாது என்பதுடன் அத்தகைய கலந்துரையாடல் நடந்துகொண்டிருக்கையில் அல்லது அத்தகைய முடிபு செய்யப்படுகையில் அத்தகைய கூட்டத்திலிருந்து நீங்குதலும் வேண்டும்.

வழக்கு நடவடிக்கைகள், செயல்கள் அல்லது முடிபுகள் வெற்றிட மொன்றின் காரணமாக செல்லுபடியற்ற தாதலாகாது

**14.** ஆணைக்குழுவின் வழக்குநடவடிக்கை, செயல் அல்லது முடிபு எதுவும், அதன் உறுப்பினர்களிடையே வெற்றிடமொன்று உள்ளமை காரணமாக மட்டும் அல்லது அதன் உறுப்பினர் ஒருவரின் நியமனத்தில் உள்ள ஏதேனும் குறைபாடு காரணமாக மட்டும் செல்லுபடியற்றதாதலாகாது.

**15.** ஆணைக்குழுவின் இலச்சினை -

*ஆணைக்குழுவின் இலச்சினை*

(அ) ஆணைக்குழுவின் கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டும்;

(ஆ) ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படக்கூடிய வாறான அத்தகைய முறையில் மாற்றப்படலாம்; அத்துடன்

(இ) ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவரினதும் ஆணைக்குழுவின் நிறைவேற்றுப் பணிப்பாள ரினதும் முன்னிலையில் அல்லது நிறைவேற்றுப் பணிப்பாளர் இல்லாதபோது, ஆணைக்குழுவின் எவரேனும் இரண்டு உறுப்பினர்களின் முன்னிலையில் தவிர, ஏதேனும் சாதனத்துக்கு அல்லது ஆவணத்துக்கு பொறிக்கப்படுதலாகாது; அவர்கள் தாம் சமுகமாயிருந்தமைக்கு அத்தாட்சி யாக அச்சாதனத்தில் அல்லது ஆவணத்தில் கையொப்பமிடுதல் வேண்டும்.

பாகம் II

## ஆணைக்குழுவின் விசாரணை மற்றும் புலனாய்வுத் தத்துவங்கள்

**16.** (1) உயர்நீதிமன்றமானது, அரசியலமைப்பின் 126 ஆம் உறுப்புரையின் நியதிகளின்படி உயர் நீதிமன்றத்துக்குச் செய்யப்பட்ட விண்ணப்பமொன்றின் கேட்பின்போது எழுகின்ற, பெண்களின் உரிமைகளின் மீறுகை அல்லது நிகழவுள்ள மீறுகை தொடர்பான ஏதேனும் கருமத்தை விசாரணைக்காகவும் அறிக்கையிடுவதற்காகவும் ஆணைக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தலாம்.

*126 ஆம் உறுப்புரையின் நியதிகளின்படி ஆற்றுப்படுத்து கையின் மீதான நடவடிக்கை முறை*

(2) ஆணைக்குழுவானது, (1) ஆம் உட்பிரிவின்கீழ் அதற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட ஏதேனும் கருமத்தை அத்தகைய ஆற்றுப் படுத்துகையில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் விசாரணைசெய்து உயர்நீதிமன்றத்துக்கு அறிக்கையிடுதல் வேண்டும்.

(3) இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி ஆணைக் குழுவினால் விசாரணை அல்லது புலனாய்வொன்று நடாத்தப் படுமிடத்து, இச்சட்டத்தினால் பாதுகாக்கப்பட்டவாறு பெண்களின் உரிமைகளின் நோக்கெல்லை அல்லது பரப்பெல்லை பற்றிய கேள்வியொன்று எழுகின்றவிடத்து, ஆணைக்குழுவானது அத்தகைய கேள்வியை அதன் மீதான உயர்நீதிமன்றத்தின் தீர்மானத்துக்காக அதற்கு ஆற்றுப்படுத்தலாம்.

பெண்களின் உரிமைகளின் மீறுகையை அல்லது நிகழவுள்ள மீறுகையை புலனாய்வு செய்வதற்கு ஆணைக்குழுவுக்கு தத்துவமளிக்கப்படல்

**17.** (1) பதினாறாம் பிரிவின்கீழ் ஆணைக்குழுவுக்கு ஆற்றுப் படுத்தப்பட்ட கருமங்களுக்கு மேலதிகமாக, 18 ஆம் பிரிவின்கீழ் அதற்குச் செய்யப்பட்ட அத்தகைய சொந்த மனு அல்லது விண்ணப்பத்தின்மேல், எவரேனும் ஆளின் செயலினால் அல்லது செய்யாமையினால் பெண்களின் உரிமைகளின் சார்த்தப்பட்ட மீறுகையொன்றை அல்லது நிகழவுள்ள மீறுகையொன்றை விசாரணை செய்யலாம் மற்றும் புலனாய்வு செய்யலாம்:

ஆயின், ஆணைக்குழுவானது, பெண்களின் உரிமைகளின் மீறுகை அல்லது நிகழவுள்ள மீறுகை தொடர்பிலான நிவாரணம் அரசியலமைப்பினால் அல்லது அப்போதைக்கு வலுவிலுள்ள வேறு ஏதேனும் சட்டத்தினால் உருவாக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட ஏதேனும் நீதிமன்றத்தில், நியாயசபையில் அல்லது ஏதேனும் நிறுவனத்தில் ஏலவே நாடப்பட்டிருப்பின், அத்தகைய மீறுகை தொடர்பில் ஏதேனும் விண்ணப்பத்தை ஏற்றுக்கவனித்தலாகாது.

(2) ஆணைக்குழு சார்த்தப்பட்ட மீறுகை அல்லது நிகழவுள்ள மீறுகை பற்றிய விண்ணப்பம் அல்லது தகவல் பெற்றுக்கொண்ட ஒரு மாதத்தினுள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட குழுவொன்றினால் நடாத்தப்படுவதற்கு (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட புலனாய்வு மற்றும் விசாரணையைச் செய்வித்தல் வேண்டுமென்பதுடன் குழுவானது அரசியலமைப்பு மற்றும் எழுத்திலான வேறு சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய புலனாய்வு மற்றும் விசாரணையை நடாத்துதலும் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட குழு அதன் புலனாய்வு பற்றிய முடிபின் மீது ஆணைக்குழுவுக்கு அதன்மீதான அறிக்கையொன்றை சமர்ப்பித்தல் வேண்டும். ஆணைக்குழு அத்தகைய அறிக்கையை கவனத்துட்கொண்டதன் பின்னர்,

பெண்கள் உரிமைகள் பற்றிய மீறுகை இருந்தாயினுஞ்சரி அல்லது நிகழவுள்ள மீறுகை இருந்தாயினுஞ்சரி இறுதி முடிபொன்றை எய்துதல் வேண்டும்.

(4) இரண்டாம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட குழுவொன்றின் உறுப்பினர்களுக்கு, நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் ஒருப்பாட்டுடன் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய படி ஆணைக்குழுவின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

பெண்களின் உரிமைகளின் மீறுகையை புலனாய்வு செய்வதற்கான விண்ணப்பம்

**18.** (1) எவரேனும் இன்னலுற்ற ஆள் அல்லது இன்னலுற்ற ஆள் சார்பாக செயலாற்றும் வேறு எவரேனும் ஆள் பெண்களின் உரிமையின் சார்த்தப்பட்ட மீறுகை அல்லது நிகழவுள்ள மீறுகை பற்றி புலனாய்வு செய்வதற்கும் விசாரணை செய்வதற்கும் ஆணைக்குழுவைத் தேவைப்படுத்தி பிரிவு 17 இன் (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டவாறு ஆணைக்குழுவுக்கு விண்ணப்பிக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழான விண்ணப்பமொன்று சார்த்தப்பட்ட மீறுகை அல்லது நிகழ்வுள்ள மீறுகையின் தேதியிலிருந்து அல்லது அத்தகைய ஆள் அத்தகைய சார்த்தப்பட்ட மீறுகை அல்லது நிகழ்வுள்ள மீறுகை பற்றி அறிய வந்த தேதியிலிருந்து ஒரு மாதத்தினுள் செய்யப்படுதல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவை பின்பற்றி எவரேனும் ஆளினால் ஆணைக்குழுவுக்கு விண்ணப்பமொன்று செய்யப்படுகின்றவிடத்து, அத்தகைய முறைப்பாடு பற்றிய விசாரணை எந்தக்காலப் பகுதியினுள் ஆணைக்குழுவின் முன்னர் முடிவுறாதுள்ளதோ அந்தக் காலப்பகுதி, அரசியலமைப்பின் 126 ஆம் உறுப்புரையின் (2) ஆம் பந்தியின் நியதிகளின்படி அத்தகைய ஆளினால் உயர் நீதிமன்றத்துக்கு அல்லது வேறு ஏதேனும் சட்டத்தின்கீழ் வேறு ஏதேனும் நியதிச்சட்டக் குழு, ஆள், நீதிமன்றம் அல்லது நியாயசபைக்கு எந்த ஒரு மாத காலப்பகுதியினுள் விண்ணப்பமொன்று செய்யப்படலாமோ அந்த ஒரு மாதகாலப்பகுதியை கணிப்பீடுசெய்வதில் கணக்கிலெடுக்கப்படுதலாகாது.

விசாரணையில் அல்லது புலனாய்வில் இரு திறத்தவர்களுக்கும் கேட்கப்படுவதற்கான வாய்ப்பு வழங்கப்படுதல் வேண்டும்

**19.** இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் நடாத்தப்பட்ட ஒவ்வொரு விசாரணையிலும் புலனாய்விலும், இன்னலுற்ற ஆளுக்கும் அதே போன்று இன்னலுற்ற ஆளின் உரிமைகளை மீறியுள்ளதாக சார்த்தப்படுகின்ற திறத்தவருக்கும் கேட்கப்படுவதற்கான வாய்ப்பொன்று அளிக்கப்படுதல் வேண்டும்.

புலனாய்வு முடிவுற்றதன் பின்னர் நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும்

**20.** (1) பதினேழாம் பிரிவின்கீழ் ஆணைக்குழுவினால் நடாத்தப்பட்ட புலனாய்வொன்று, இன்னலுற்ற ஆளொருவரின் உரிமைகளின் மீறுகை அல்லது நிகழவுள்ள மீறுகையொன்று இடம்பெற்றிருந்திருந்தது என வெளிவிடாதவிடத்து, ஆணைக்குழுவானது, அந்நிகழ்வைப் பதிதல் வேண்டும் என்பதுடன் புலனாய்வானது அதற்காக செய்யப்பட்ட விண்ணப்பமொன்றின்மேல் தொடங்கப்பட்டிருப்பின், பதினான்கு நாட்களினுள் விண்ணப்பதாரருக்கு உடனடியாக அறிவித்தலும் வேண்டும்.

(2) பதினேழாம் பிரிவின்கீழ் ஆணைக்குழுவினால் நடாத்தப்பட்ட புலனாய்வொன்று, இன்னலுற்ற ஆளின் உரிமைகளின் மீறுகை அல்லது நிகழவுள்ள மீறுகையொன்று உண்மையில் இடம்பெற்றிருந்திருந்தது என வெளிவிடுகின்றவிடத்து, ஆணைக்குழுவானது -

(அ) முறைப்பாடுசெய்யப்பட்ட இன்னல் மத்தியஸ்தம் மூலம் பயனுள்ள வகையில் தீர்க்கப்படலாம் என ஆணைக்குழு அபிப்பிராயப்படின், 21 ஆம் பிரிவின் நியதிகளின்படி மத்தியஸ்தத்துக்காக விடயத்தை ஆற்றுப்படுத்தலாம் என்பதுடன் அவ்வாறு நியமிக்கப்பட்ட மத்தியஸ்தருக்கு முன்னர் தோன்றுமாறு திறத்தவர்களையும் பணிக்கலாம்; அல்லது

(ஆ) ஆணைக்குழுவின் அபிப்பிராயத்தில் எந்த முறையில் மீறுகை அல்லது நிகழவுள்ள மீறுகை பரிகரிக்கப்படலாமோ அல்லது தடுக்கப்படலாமோ அந்த முறை பற்றிய விதப்புரையொன்றை இயைபான ஆளுக்கு அனுப்பிவைக்கலாம்.

(3) ஆணைக்குழுவானது, (2) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி ஆணைக்குழுவினால் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை பற்றி முடிபுசெய்யப்படும் தேதியிலிருந்து பதினான்கு நாட்களினுள் இன்னலுற்ற ஆளுக்கு அறிவித்தல் வேண்டும்.

மத்தியஸ்தம்

**21.** (1) ஆணைக்குழு, 20 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழ் அல்லது 36 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்கீழ் மத்தியஸ்தத்துக்காக பிணக்கொன்றை ஆற்றுப்படுத்துகின்றவிடத்து, அத்தகைய பிணக்கை மத்தியஸ்தம் செய்வதற்காக குறித்தளிக்கப்பட்ட மத்தியஸ்தர் அல்லது மத்தியஸ்தர்கள் -

(அ) பிணக்கை சுமுகமாக தீர்ப்பதற்கு திறத்தவர்களுக்கு உதவும் நோக்குடன் திறத்தவர்களுக்கிடையில் மத்தியஸ்தம் செய்தல் வேண்டும்;

(ஆ) மத்தியஸ்த நடவடிக்கைகளை நடாத்துவதற்கு ஏற்புடையற்பாலனவான நடவடிக்கைமுறை விதிகளுடன் இணங்கியொழுகும் வகையில் மத்தியஸ்த செயன்முறையை நடாத்துதல் வேண்டும்;

(இ) சொல்லப்பட்ட மத்தியஸ்தர் அல்லது மத்தியஸ்தர்கள் எத்தேதியன்று நியமிக்கப்பட்டார்களோ அத்தேதியிலிருந்து அறுபது நாட்காலப்பகுதியொன்றினுள் மத்தியஸ்த செயன்முறையை நிறைவுசெய்தல் வேண்டும்; அத்துடன்

(ஈ) மத்தியஸ்த செயன்முறையின்போது, மத்தியஸ்தர்களுக்கான நடத்தைக்கோவையில் எடுத்துக் கூறப்பட்டுள்ள நெறிகளினால் அமைந்தொழுகுதல் வேண்டும்.

(2) ஆணைக்குழுவானது, மத்தியஸ்த நடவடிக்கைகளின் நடாத்துகைக்கு ஏற்புடையதாகும் நடவடிக்கைமுறையில் விதிகளை எடுத்துக்கூறி விதிகளை ஆக்குதல் வேண்டும்.

(3) மத்தியஸ்தர் ஒருவருக்கு தேவைப்படுத்தப்பட்ட தகைமைகள், பிணக்குகளை மத்தியஸ்தம் செய்வதற்கு குறித்தளிக்கப்பட வேண்டிய மத்தியஸ்தர்கள் குழாங்களை ஆயத்தஞ்செய்தல் மற்றும்

மத்தியஸ்தர் ஒருவருக்கு ஏற்புடையற்பாலனவான நெறிகளை எடுத்துக்கூறும் மத்தியஸ்தர்களுக்கான நடத்தைக்கோவை என்பன விதித்துரைக்கப்படுகின்றவாறாகவிருத்தல் வேண்டும்.

மத்தியஸ்தம் முடிவுறுவதன் மீதான நடவடிக்கை முறை

**22.** (1) மத்தியஸ்தம் மூலமான தீர்வொன்று திறத்தவர் களுக்கிடையில் எய்தப்படுமிடத்து, திறத்தவர்களினால் உடன்பட்டுக்கொள்ளப்பட்ட தீர்த்துவைத்தலின் நியதிகள் உடன்படிக்கையொன்று என்ற வடிவத்தில், பிணக்கை மத்தியஸ்தம் செய்வதற்கு குறித்தளிக்கப்பட்ட மத்தியஸ்தரினால் அல்லது மத்தியஸ்தர்களினால் எழுத்தில் இடப்படுதல் வேண்டும் என்பதுடன் அதன்பின்னர் அதன்கீழான கடப்பாடுகளுடன் இணங்கியொழுகவேண்டிய அத்திறத்தவர்களினால் கையொப்ப மிடப்படுதலும் வேண்டும். மத்தியஸ்தர்கள் உடன்படிக்கையின் பிரதியொன்றை ஆணைக்குழுவுக்கு அனுப்பிவைத்தல் வேண் டும்.

(2) இப்பிரிவின்கீழ் மத்தியஸ்தத்துக்காக விடயமொன்று ஆற்றுப்படுத்தப்பட்டு தீர்வொன்றுக்கு வரப்படுகின்றவிடத்து, ஆணைக்குழுவானது அதனை பதினான்கு நாட்களினுள் விண்ணப்பதாரருக்கு அறிவித்தல் வேண்டும் என்பதுடன் அதன்பின்னர் அத்தகைய தீர்த்துவைத்தலின் நியதிகளுக்கு பயன்கொடுப்பதற்கு அவசியமாகக்கூடியவாறான நட்டஈட்டுக் கொடுப்பனவு பற்றிய பணிப்புக்கள் உட்பட அத்தகைய பணிப்புக் களைச் செய்தலும் வேண்டும்.

(3) மத்தியஸ்தச் செயன்முறை வெற்றிகரமாக இல்லாத பட்சத்தில் அல்லது ஒரு திறத்தவர் அதனை ஆட்சேபிக்கின்றவிடத்து, மத்தியஸ்தர் அதற்கிணங்க நிலைமையை ஆணைக்குழுவுக்கு அறிக்கையிடுதல் வேண்டும்.

(4) மூன்றாம் உட்பிரிவின்கீழ் அறிக்கையைப் பெறுவதன்மேல், மத்தியஸ்தத்துக்கான எத்தனிப்பு வெற்றிகரமாக இல்லாதவிடத்து, ஆணைக்குழு -

(அ) அத்தகைய மீறுகையை அல்லது அத்தகைய மீறுகை தொடர்ந்து புரியப்படுவதனை தடுக்கும் அல்லது அதனை பரிகரிக்கும் நோக்குடன் தோதான அதிகாரசபைக்கு அல்லது சம்பந்தப்பட்ட ஆள்

அல்லது ஆட்களுக்கு அது தகுதியானது என கருதுகின்றவாறான அத்தகைய விதப்புரையைச் செய்யலாம்;

(ஆ) அத்தகைய மீறுகைக்குப் பொறுப்பாகவுள்ள ஆளுக்கெதிராக குற்றவழக்கு அல்லது வேறு வழக்கு நடவடிக்கைகள் தொடுக்கப்படுதல் வேண்டும் என தோதான அதிகாரசபைக்கு விதந்துரைக்கலாம்; அத்துடன்

(இ) அச்சூழ்நிலைகளில் நீதியாகவும் ஒப்புரவாகவும் உள்ளது என அது கருதுகின்றவாறான அத்தகைய நிவாரணத்தை அளிக்கலாம் அல்லது அத்தகைய பணிப்பைச் செய்யலாம்.

உடன் படிக்கையில் உள்ள விதப்புரைகளுக்கு பயன்கொடுக்குமாறு திறத்தவர்கள் முதலியவர்களை ஆணைக்குழு தேவைப்படுத்தல்

***23.*** (1) ஆணைக்குழுவானது, அதற்கு உடன்படிக்கை அனுப்பிவைக்கப்பட்டதன் விளைவாக, அத்தகைய முடிபுகள் அல்லது விதப்புரைகளுக்கு பயன்கொடுப்பதற்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய எல்லா நடவடிக்கைகளையும் எடுக்குமாறு உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்டவாறு தீர்வின் விதப்புரைகளில் குறிப்பிடப்பட்ட பிணக்குக்கான திறத்தவர்கள் மற்றும் வேறு எவரேனும் இயைபான ஆள் அல்லது அரசாங்கத் திணைக்களம் அல்லது நிறுவனத்துக்கு அறிவித்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட உடன்படிக்கையொன்றில் அடங்கியுள்ள முடிபு அல்லது விதப்புரையொன்றுக்கு பயன்கொடுப்பதற்கு அவசியமான நடவடிக்கைகளை எடுப்பதற்கு இயலாதவராகவுள்ள அத்தகைய முடிபு அல்லது விதப்புரைக்கு பயன்கொடுப்பதற்கு பணிக்கப்பட்டுள்ள எவரேனும் இயைபான ஆள் அல்லது அரசாங்க திணைக்களம் அல்லது நிறுவனம் அதன் இயலாமைக்கான காரணங்களைக் குறிப்பிட்டு அதனை உடனடியாக ஆணைக்குழுவுக்கு அறிவித்தல் வேண்டும்.

ஆணைக்குழுவின் முடிபுக்கெதிரான மேன்முறையீடு

***24.*** (1) இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஆணைக்குழுவின் முடிபொன்றினால் இன்னலுற்றவரான எவரேனும் ஆள் அத்தகைய முடிபு அத்தகைய ஆளுக்கு அறிவிக்கப்பட்ட தேதியிலிருந்து ஒரு மாதத்தினுள் மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு அத்தகைய முடிபுக்கெதிராக மேன்முறையீடு செய்யலாம்.

(2) இப்பிரிவின்கீழ் மேன்முறையீடுகள் தொடர்பில் அரசியலமைப்பின் உறுப்புரை 136இன்கீழ் விதிகள் ஆக்கப்படும் வரை, மேன்முறையீட்டுக்கான மீளாய்வு என்ற வகையாக விண்ணப்பமொன்று தொடர்பில் அவ்வுறுப்புரையின்கீழ் ஆக்கப்பட்ட விதிகள் இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப் பட்ட ஒவ்வொரு மேன்முறையீடு தொடர்பிலும் ஏற்புடையதாதல் வேண்டும்.

*இச்சட்டத்தின் கீழான விசாரணை அல்லது புலனாய்வுக் கான தத்துவங்கள்*

**25.** (1) ஆணைக்குழுவானது, இச்சட்டத்தின்கீழான விசாரணை அல்லது புலனாய்வு நோக்கங்களுக்காக, பின்வருவனவற்றிற்கான தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்–

(அ) பெற்றுக்கொள்வது அல்லது விசாரணை செய்வது அவசியமானது அல்லது விரும்பத்தக்கது என ஆணைக்குழு கருதுகின்றவாறாக எழுத்திலான அல்லது வாய்மொழி மூலமான அத்தகைய எல்லாச் சான்று களையும் பெற்றுக்கொள்ளலும் பெறுதலும் சாட்சிகளாக அத்தகைய எல்லா ஆட்களை விசாரணைசெய்தலும்;

(ஆ) சத்தியம் அல்லது உறுதியுரையின் மீது வழங்கப்பட வேண்டிய எவரேனும் சாட்சியின் எழுத்திலான அல்லது வாய்மொழிமூலமான சான்றைத் தேவைப்படுத்தல். அத்தகைய சத்தியம் அல்லது உறுதியுரை, அத்தகைய சாட்சி சட்ட நீதிமன்றமொன் றில் சான்றளித்துக்கொண்டிருப்பின், சாட்சியிடம் தேவைப்படுத்தப்படுகின்ற அச்சத்தியம் அல்லது உறுதியுரையாக இருத்தல் வேண்டும் என்பதுடன் அத்தகைய சத்தியம் அல்லது உறுதியுரை ஆணைக்குழுவினால் அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரொருவரினால், ஆணைக்குழுவின் முன்னர் சான்றளிக்கும் ஒவ்வொரு சாட்சிக்கும் எடுத்தோதப் படுதலும் வேண்டும்;

(இ) எவரேனும் ஆளை சான்றளிப்பதற்கு அல்லது அவரது உடைமையில் உள்ள ஏதேனும் ஆவணத்தை அல்லது வேறு பொருளைக் காண்பிப்பதற்கு மற்றும் அத்தகைய ஆளை சாட்சி ஒருவராக விசாரணை செய்வதற்கு

அல்லது அத்தகைய ஆளை ஏதேனும் ஆவணத்தை அல்லது வேறு பொருளைக் காண்பிக்குமாறு தேவைப் படுத்துவதற்கு ஆணைக்குழுவின் எவையேனும் வழக்கு நடவடிக்கைகளுக்கு வருகைதருமாறு அல்லது அவற்றில் பங்குபற்றுமாறு அத்தகைய ஆளை கட்டளை விட்டழைத்தல்;

(ஈ) சான்றுக்கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், குடியியல் அல்லது குற்றவியல் வழக்கு நடவடிக்கைகளில் ஏல்தகவுடையனவற்றவாகவிருக்கக்கூடிய எழுத்திலான அல்லது வாய்மொழிமூலமான ஏதேனும் சான்று கேள்வியிலுள்ள பிணக்குக்கு முக்கியமானதாகவிருப்பின் அத்தகைய சான்றை ஏற்றுக் கொள்ளல்; அத்துடன்

(உ) அத்தகைய விசாரணை அல்லது புலனாய்வு அல்லது அதன் ஏதேனும் பாகத்துக்கு பொதுமக்களை அனுமதித்தல் அல்லது தவிர்த்தல்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் கட்டளைவிட்டழைக்கப்பட்ட ஒவ்வொரு ஆளும் 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் நியதிகளின்படி தேவைப் படுத்தப்பட்ட தகவல்களை வெளிவிடுவதிலிருந்து தடைசெய்யப்படுபவராகவிருந்தாலொழிய அத்தகைய அழைப்பாணைகளுடன் இணங்கியொழுகுவது அத்தகைய ஆளின் கடமையாதல் வேண்டும்.

**26.** (1) ஆணைக்குழுவுக்கு முன்னர் சான்றளிக்கும் எவரேனும் ஆள், அத்தகைய சான்று தொடர்பில், சட்ட நீதிமன்றமொன்றின் முன்னர் சான்றளிக்கும் சாட்சி ஒருவரினால் அளிக்கப்படும் சான்று தொடர்பில், அத்தகைய ஆள் எந்த சிறப்புரிமைகளுக்கு உரித்துடையவராகவுள்ளாரோ அந்த எல்லா சிறப்புரிமைகளுக்கும் உரித்துடையவராதல் வேண்டும்.

ஆணைக்குழுவுக்கு முன்னர் சான்றளிக்கும் ஆட்களின் சிறப்புரிமைகள்

(2) ஆளெவரும், அவ்வாளினால் ஆணைக்குழுவுக்கு அல்லது அதன் முன்னர் அளிக்கப்பட்ட ஏதேனும் எழுத்திலான அல்லது வாய்மொழிமூலமான சான்று தொடர்பில், ஏதேனும் நீதிமன்றத்தில் ஏதேனும் வழக்கு, குற்றவழக்கு அல்லது வேறு குடியியல் அல்லது குற்றவியல் வழக்கு நடவடிக்கைகளுக்கு ஆளாதலாகாது.

(3) இதனகத்துப்பின்னர் ஏற்பாடுசெய்யப்பட்டவாறுக்கமைய, ஆணைக்குழுவுக்கு அல்லது அதன் முன்னர் செய்யப்பட்ட அல்லது அளிக்கப்பட்ட சான்று அல்லது கூற்று எதுவும், ஏதேனும் நீதிமன்றத்தில் ஏதேனும் வழக்கில், குற்றவழக்கில் அல்லது வேறு குடியியல் அல்லது குற்றவியல் வழக்கு நடவடிக்கையில் அவ்வாளுக்கெதிராக ஏல்தகவுடையதாதலாகாது:

ஆயின், இவ்வுட்பிரிவின் ஏற்பாடுகளில் உள்ள எதுவும், (19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவையின் அத்தியாயம் XI இன் கீழான ஏதேனும் தவறுக்கான ஏதேனும் குற்றவழக்கை அல்லது தண்டத்தை பாதித்தலோ அல்லது பாதிப்பதாக கருதப்படுதலோ அல்லது அமைத்துருவாக்கப்படுதலோ ஆகாது:

ஆயின் மேலும், இவ்வுட்பிரிவின் ஏற்பாடுகளில் உள்ள எதுவும், (19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவையின் அத்தியாயம் XI இன் கீழான ஏதேனும் தவறுக்காக ஆணைக்குழுவின் முன்னர் சான்றளிக்கின்ற குற்றவழக்கு நோக்கங்களுக்காக எவரேனும் அச்சாட்சியின் பெயரின் அல்லது சான்றின் அல்லது சான்றின் ஏதேனும் பாகத்தின் வெளியீட்டை அல்லது வெளிவிடுகையை தடைசெய்தலாகாது அல்லது தடைசெய்வதாக கருதப்படுதலோ அல்லது அமைத்துருவாக்கப்படுதலோ ஆகாது.

*அழைப்புக் கட்டளைகள் தவிசாளரின் கைப்பட்டதாக விருத்தல் வேண்டும்*

**27.** (1) ஆணைக்குழுவினால் வழங்கப்படும் ஒவ்வொரு அழைப்புக்கட்டளையும் ஆணைக்குழுவின் தவிசாளரின் கைப்பட்டதாகவிருத்தல் வேண்டும்.

(2) அழைப்புக்கட்டளையொன்று, அதன்கண் பெயரிடப்பட்டுள்ள ஆளுக்கு ஒப்படைப்பதன்மூலம் அல்லது அவ்வாளின் கடைசியாக அறியப்பட்ட வாழிடத்தில் விட்டுவைப்பதன்மூலம் அல்லது அவ்வாளின் வாழிடத்துக்கு பதிவஞ்சல் மூலம் அனுப்புவதன்மூலம் சேர்ப்பிக்கப்படலாம்.

(3) அழைப்புக்கட்டளையொன்று சேர்ப்பிக்கப்படுகின்ற ஒவ்வொரு ஆளும், அதன்கண் குறித்துரைக்கப்பட்ட நேரத்திலும் இடத்திலும் ஆணைக்குழுவுக்கு முன்னர் வருகைதருதல் வேண்டும் என்பதுடன் ஆணைக்குழுவினால் அவரிடம் தொடுக்கப்படுகின்ற கேள்விக்கு பதிலளித்தலும் வேண்டும் அல்லது அவரைத் தேவைப்படுத்துகின்றனவும் மற்றும் அவரது உடைமையில் அல்லது

தத்துவத்தில் உள்ளனவுமான அத்தகைய ஆவணங்களை அல்லது பொருட்களை காண்பித்தலும் வேண்டும்.

ஆணைக்குழுவை அவமதித்தல்

**28.** (1) ஆணைக்குழுவின் முன்னிலையிலாயினுஞ்சரி அல்லது வேறு வகையாகவாயினுஞ்சரி, ஆணைக்குழு தொடர்பாக செய்யப்பட்ட அல்லது செய்யாதுவிடப்பட்ட ஒரு செயல், அத்தகைய செயல் உயர் நீதிமன்றம் தொடர்பாக செய்யப்பட்டு அல்லது செய்யாதுவிடப்பட்டு இருப்பின், அச்செயல் அத்தகைய நீதிமன்றத்தின் அதிகாரத்துக்கு எதிரான அல்லது அதற்கு அவமரியாதையான தவறொன்றை அமைத்துருவாக்கியிருப்பின் ஆணைக்குழுவின் அதிகாரத்துக்கு எதிரான அல்லது அதற்கு அவமரியாதையான அவமதிப்புத் தவறொன்றாக அமைதல் வேண்டும்.

(2) ஆணைக்குழுவின் அதிகாரத்துக்கெதிராக அல்லது அவமரியாதையாக புரியப்பட்ட அவமதிப்புத் தவறு ஒவ்வொன்றும், அது உயர்நீதிமன்றத்தின் அதிகாரத்துக்கெதிராக அல்லது அதற்கு அவமரியாதையாக புரியப்பட்ட அவமதிப்புத் தவறொன்றாக விருந்தது என்றாற்போன்று அந்நீதிமன்றத்தினால் தண்டிக்கப்படற்பாலதாதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய ஒவ்வொரு தவறையும் விளங்குவதற்கான நியாயாதிக்கம் இத்தால் உயர்நீதிமன்றத்துக்கு உரித்தாக்கப்படுகின்றது.

(3) (அ) இச்சட்டத்தின்கீழ் சேர்ப்பிக்கப்பட்ட அழைப்பாணைகளில் குறிப்பிடப்பட்ட நேரத்திலும் இடத்திலும் ஆணைக்குழுவின் முன்னர் தோன்றுவதற்கு ஆணைக்குழுவின் அபிப்பிராயத்தில் நியாயமானதாகவுள்ள காரணமின்றி தவறுகின்ற;

(ஆ) சத்தியம் செய்வதற்கு அல்லது உறுதியுரைமொழிவதற்கு மறுக்கின்ற அல்லது உரிய முறையில் சத்தியம்செய்து அல்லது உறுதியுரைமொழிந்து, ஆணைக்குழுவினால் விசாரணை செய்யப்படுகின்ற அல்லது புலனாய்வுசெய்யப்படுகின்ற கருமங்கள் சம்பந்தமாக அவரிடம் தொடுக்கப்படுகின்ற ஏதேனும் கேள்விக்கு பதிலளிப்பதற்கு காரணமின்றி மறுக்கின்ற அல்லது தவறுகின்ற; அல்லது

(இ) ஆணைக்குழுவினால் அவருக்கு வழங்கப்பட்ட அல்லது செய்யப்பட்ட அறிவித்தல் அல்லது எழுத்திலான கட்டளை அல்லது பணிப்பொன்றின் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுவதற்கு ஆணைக்குழுவின் அபிப்பிராயத்தில் நியாயமான தாகவுள்ள காரணமின்றி மறுக்கின்ற அல்லது தவறுகின்ற;

(ஈ) அத்தகைய ஆளின் உடைமையில் அல்லது கட்டுக்காப்பில் உள்ளதும் ஆணைக்குழுவின் அபிப்பிராயத்தில் விசாரணை செய்யப்படுகின்ற அல்லது புலனாய்வுசெய்யப்படுகின்ற கருமங்களின் உண்மைத்தன்மையை நிச்சயிப்பதற்காக தேவைப் படுத்தப்பட்டதுமான ஏதேனும் ஆவணத்தை அல்லது வேறு பொருளை ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிப்பதற்கும் காட்டுவதற்கும் ஆணைக்குழுவின் அபிப்பிராயத்தின் நியாயமானதாகவுள்ள காரணமின்றி மறுக்கின்ற அல்லது தவறுகின்ற; அல்லது

(உ) ஆணைக்குழுவின் விதப்புரை அல்லது முடி பொன்றுடன் இணங்கியொழுகுவதற்கு தவறுகின்ற,

எவரேனும் ஆள், ஆணைக்குழுவின் அதிகாரத்துக்கு எதிரான அல்லது அதற்கு அவமரியாதையான அவமதிப்புத் தவறுக்கு குற்றவாளியாதல் வேண்டும்.

(4) ஆளொருவர் (3) ஆம் உட்பிரிவின் (ஆ) அல்லது (இ) என்னும் பந்தியின்கீழ் அவமதிப்புத் தவறொன்றுக்கு குற்றவாளியாவார் என ஆணைக்குழு தீர்மானிக்கின்றவிடத்து, ஆணைக்குழு அத்தகைய தீர்மானத்தை எடுத்துக்கூறி சான்றிதழொன்றை உயர்நீதிமன்றத் துக்கு அனுப்பிவைக்கலாம். அத்தகைய ஒவ்வொரு சான்றிதழும் ஆணைக்குழுவின் தவிசாளரினால் கையொப்ப மிடப்படுதல் வேண்டும்.

(5) இப்பிரிவில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறு, உயர்நீதிமன்றம் கவனத்துட்கெடுப்பதற்கு தகுதியானதென கருதக்கூடிய அவமதிப்புத் தவறொன்றின் தண்டனைக்கான எவையேனும்

வழக்குநடவடிக்கைகளில், (4) ஆம் உட்பிரிவின்கீழ் கையொப்பமிட்டு நீதிமன்றத்துக்கு அனுப்பப்பட்ட சான்றிதழ் ஒன்றாகக் கொள்ளக்கூடிய ஏதேனும் ஆவணம் -

(அ) சான்றில் பெறப்படுதல் வேண்டும் என்பதுடன் முரணாக எண்பிக்கப்பட்டாலொழிய, மேலதிக எண்பிப்பின்றி அத்தகைய சான்றிதழொன்றாகக் கருதப்படுதலும் வேண்டும்; அத்துடன்

(ஆ) சான்றிதழில் எடுத்துக்கூறப்பட்ட தீர்மானம் ஆணைக் குழுவினால் செய்யப்பட்டதற்கும் மற்றும் அத்தீர்மானத்தில் கூறப்பட்ட நிகழ்வுகள் பற்றிய சான்றாகவிருத்தல் வேண்டும்.

(6) ஆணைக்குழுவின் அதிகாரத்துக்கெதிராக அல்லது அதற்கு அவமரியாதையாக ஏதேனும் சார்த்தப்பட்ட அவமதிப்புத் தவறின் தண்டனைக்காக இப்பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு எடுக்கப்பட்ட ஏதேனும் வழக்கு நடவடிக்கையில், ஆணைக்குழுவின் உறுப்பினர் எவரும், இச்சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், அவரது சொந்த சம்மதத்துடன் தவிர சாட்சி ஒருவராக கட்டளைவிட்டழைக்கப்படுதலோ அல்லது விசாரணை செய்யப்படுதலோ ஆகாது.

## பாகம் III

## பெண்களின் உரிமைகளுக்கான பாராளுமன்ற ஆணையாளர் மற்றும் ஆணைக்குழுவின் பணியாட்டொகுதியினர்

பெண்களின் உரிமைகளுக் கான பாராளுமன்ற ஆணையாளர் ஒருவரை நியமித்தல்

**29.** (1) (இதனகத்துப்பின்னர் "பாராளுமன்ற ஆணையாளர்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) பெண்களின் உரிமைகளுக்கான பாராளுமன்ற ஆணையாளர் என அழைக்கப்படவேண்டியவரும் அறியப்படவேண்டியவருமான ஆளொருவர் ஆணைக்குழுவின் பணியாட்டொகுதிக்கு நியமிக்கப்படுதல் வேண்டும்; அவர், முதற்தடவையில், பால்நிலை அடிப்படையிலான வன்முறையுடன் சம்பந்தப்பட்ட ஏதேனும் முறைப்பாட்டை அல்லது பெண்களின் உரிமைகளின் மீறுகை அல்லது நிகழவுள்ள மீறுகை சம்பந்தமான முறைப்பாடொன்றை ஏற்றுக்கவனிக்கும் பொறுப்பு பொறுப்பிக் கப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் நியதிகளின்படி பாராளுமன்ற ஆணையாளர் பதவியை வகிப்பதற்கு நியமிக்கப்பட்ட ஆள், சட்டம், மனித உரிமைகள், மத்தியஸ்தம் மற்றும் பிணக்குத்தீர்த்தல் ஆகிய துறைகளில் எண்பிக்கப்பட்ட ஆற்றலுடன் நன்மதிப்புள்ள ஆளொருவராகவிருத்தல் வேண்டும்.

(3) பால்நிலை அடிப்படையிலான வன்முறை அல்லது பெண்களின் உரிமைகளின் மீறுகை அல்லது நிகழவுள்ள மீறுகைக்கு அமைந்த அல்லது அவற்றின் நிகழ்வை அறிகின்ற எவரேனும் ஆள் பாராளுமன்ற ஆணையாளருக்கு முறைப்பாடொன்றைச் செய்யலாம்.

(4) பாராளுமன்ற ஆணையாளர், பெறப்பட்ட எல்லா முறைப்பாடுகளும் பற்றிய பதிவேடொன்றைப் பேணுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய முறைப்பாடுகள் பெறப்படுகின்ற ஒழுங்கில் ஒவ்வொரு முறைப்பாட்டினதும் நிகழ்வுகள் பற்றி விசாரணைகளைச் செய்தலும் வேண்டும்.

(5) முறைப்பாடொன்று பற்றி விசாரணையொன்று முடிவுறுவதன்மீது, பாராளுமன்ற ஆணையாளர், இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி முறைப்பாட்டாளருக்கு கிடைக்கக்கூடியதாகவுள்ள நிவாரணத்துக்கு இயன்றனவாகவுள்ள வழிகளையும் அடக்கிய அறிக்கையொன்றை ஆணைக்குழுவுக்கு அனுப்பிவைத்தல் வேண்டும். ஆணைக்குழுவானது, இச்சட்டத்தின் பாகம் II இன் நியதிகளின்படி எடுக்கப்படவேண்டிய நடவடிக்கையை தீர்மானிப்பதில் பாராளுமன்ற ஆணையாளரினால் செய்யப்பட்ட விதப்புரைகளை கவனத்திற்கு எடுத்தல் வேண்டும்.

(6) பாராளுமன்ற ஆணையாளருக்கு ஏற்புடையற்பாலனவான விசாரணை நியதிகள், செலுத்தப்படற்பாலனவான ஊதியம், பதவியிலிருந்து அகற்றப்படும் முறை உட்பட பதவிக்காலம் மற்றும் பாராளுமன்ற ஆணையாளரினால் அமைந்தொழுகப்படவேண்டிய நடத்தைக்கோவை என்பன விதித்துரைக்கப்படுகின்றவாறாக விருத்தல் வேண்டும்.

(7) ஆணைக்குழுவானது, பாராளுமன்ற ஆணையாளருக்கு முறைப்பாடொன்றைச் செய்வதற்கான நடவடிக்கைமுறையை குறித்துரைத்துரைக்கின்ற வழிகாட்டுநெறிகளை வழங்கலாம்.

நிறைவேற்றுப் பணிப்பாளர்

**30.** (1) ஆணைக்குழுவின் நிறைவேற்றுப் பணிப்பாளராகவிருப்பதற்கு விதித்துரைக்கப்பட்ட தகைமைகளுடன் ஆளொருவர், அமைச்சரின் விதப்புரையின்மீது சனாதிபதியினால் நியமிக்கப்படுதல் வேண்டும்; அவர் ஆணைக்குழுவின் அறிவுறுத்தல்களின்மீது செயலாற்றுதல் வேண்டுமென்பதுடன் ஆணைக்குழுவின் பொதுவான பணிப்புக்கும் கட்டுப்பாட்டுக்கும் அமைந்தவராதலும் வேண்டும், அத்துடன் ஆணைக்குழுவுக்குப் பொறுப்பாகவிருத்தல் வேண்டும்.

(2) ஏதேனும் எழுத்திலான சட்டம் மற்றும் காலத்துக்குக்காலம் அரசாங்கத்தினால் வழங்கப்படும் எவையேனும் வழிகாட்டு நெறிகளுக்கமைய, நிறைவேற்றுப் பணிப்பாளரின் ஊதியம் மற்றும் ஆட்சேர்ப்புத் திட்டம் உட்பட தொழில் நிபந்தனைகள் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(3) நிறைவேற்றுப் பணிப்பாளர் ஆணைக்குழுவின் கூட்டங்களுக்கு சமுகமளிக்கலாமென்பதுடன் அத்தகைய கூட்டங்களில் உரையாடலாம், ஆனால் அத்தகைய ஏதேனும் கூட்டத்தில் வாக்களிப்பதற்கு உரித்துடையவராதலாகாது.

(4) சனாதிபதி, குறித்தளிக்கப்பட்ட காரணங்களுக்காக, (1) ஆம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட நிறைவேற்றுப் பணிப்பாளரை அத்தகைய பதவியிலிருந்து அகற்றலாம்.

ஆணைக்குழுவின் பணியாட்டொகுதியினர்

**31.** (1) ஆணைக்குழுவானது, அதன் பணிகளை முறையாகவும் வினைத்திறனாகவும் நிறைவேற்றுவதற்கு அது அவசியமானதெனக் கருதுகின்றவாறான அத்தகைய அலுவலர்களினதும் ஊழியர்களினதும் எண்ணிக்கையை நியமிக்கலாம்.

(2) ஆணைக்குழுவானது -

(அ) ஆணைக்குழுவின் எவரேனும் அலுவலர் அல்லது ஊழியர் மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டை பிரயோகிக்கலாம் அல்லது அவரை நீக்கலாம்;

(ஆ) இயைபான எழுத்திலான சட்டங்களுக்கமையவும் காலத்துக்குக்காலம் அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட எவையேனும் வழிகாட்டுநெறிகளுக்கமையவும்,

அலுவலர்களினதும் ஊழியர்களினதும் ஊதியம் மற்றும் ஆட்சேர்ப்புத் திட்டம் உட்பட தொழில் நிபந்தனைகளை விதிக்கலாம்;

(இ) ஏதேனும் எழுத்திலான சட்டத்துக்கமைய ஆணைக் குழுவின் அலுவலர்களினதும் ஊழியர்களினதும் நன்மைக்காக சகாய நிதியமொன்றையும் வேறு எவையேனும் சேமநல மற்றும் பாதுகாப்புத் திட்டங்களையும் தாபித்து ஒழுங்குபடுத்தலாம் என்பதுடன் அத்தகைய ஏதேனும் நிதியம் அல்லது திட்டத்துக்கு உதவுதொகைகளைச் செலுத்தலாம்.

*(3)* ஆணைக்குழுவின் கோரிக்கையின் பேரில், பகிரங்க சேவையில் உள்ள எவரேனும் அலுவலர், அவ்வலுவலரினதும் அவ்வலுவலர் எந்த அமைச்சின்கீழ் தொழிலுக்கமர்த்தப்படு கின்றாரோ அந்த அமைச்சின் செயலாளரினதும் பொதுநிருவாகம் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளரினதும் சம்மதத்துடன் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு ஆணைக்குழுவின் பணியாட்டொகுதிக்கு தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது அதேபோன்ற சம்மதத்துடன் அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

*(4)* (அ) பகிரங்க சேவையில் உள்ள எவரேனும் அலுவலர் ஆணைக்குழுவின் பணியாட்டொகுதிக்கு தற்காலிகமாக நியமிக்கப்படுகின்றவிடத்து, 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச்சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், அத்தகைய அலுவலருக்கும் அவர் தொடர்பாகவும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(ஆ) பகிரங்க சேவையில் உள்ள எவரேனும் அலுவலர் ஆணைக்குழுவின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படுகின்றவிடத்து, 1991 ஆம் ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், அத்தகைய அலுவலருக்கும் அவர் தொடர்பாகவும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(இ) ஆணைக்குழுவானது, அரசாங்கத்துடனான எந்த ஒப்பந்தத்தின் மூலம் எவரேனும் ஆள் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியொன்றுக்காக அரசாங்கத்துக்கு சேவையாற்றுவதற்கு உடன்பட்டுள்ளாரோ அந்த ஏதேனும் ஒப்பந்தத்தைச் செய்துள்ள அவரை தொழிலுக்கமர்த்துகின்றவிடத்து, அவ்வாளினாலான ஆணைக்குழுவுக்கான ஏதேனும் சேவைக்காலப்பகுதி, அத்தகைய ஒப்பந்தத்தின் கீழ் அவரது கடப்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத்துக்காக அரசாங்கத்துக்கான சேவையாக கருதப்படுதல் வேண்டும்.

## பாகம் IV

## பெண்களுக்கான தேசிய நிதியம்

பெண்களுக்கான தேசிய நிதியத்தைத் தாபித்தல்

**32.** (1) (இதனகத்துப்பின்னர் ''நிதியம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) ''பெண்களுக்கான தேசிய நிதியம்'' என அழைக்கப் படவேண்டிய நிதியமொன்று, இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக தாபிக்கப்படுதல் வேண்டும்.

(2) நிதியத்தின் நிருவாக மற்றும் முகாமைத்துவத் தத்துவம் ஆணைக்குழுவுக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும்.

(3) பின்வருவன நிதியத்துக்கு செலுத்தப்படுதல் வேண்டும் –

(அ) ஆணைக்குழுவின் பயன்பாட்டுக்காக பாராளுமன்றத்தினால் காலத்துக்குக்காலம் வாக்களிக்கப்பட வேண்டியவாறான அத்தகைய எல்லாப் பணத் தொகைகளும்;

(ஆ) வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் அங்கீகாரத்துடன் இலங்கையிலாயினுஞ்சரி அல்லது வெளிநாட்டிலாயினுஞ்சரி எத்தகையதுமான ஏதேனும் மூலத்திலிருந்து உதவி, கொடை, மானியக்கொடைகள், நன்கொடைகள் அல்லது இறுதிவிருப்பாவணக் கொடைகள் என்ற வகையாக ஆணைக்குழுவினால் பெறப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்; அல்லது

(இ) ஆணைக்குழுவின் ஏதேனும் அசையும் அல்லது அசையா ஆதனத்தின் விற்பனையிலிருந்து வரும்படிகள் என்றவகையாக ஆணைக்குழுவினால் பெறப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத் தொகைகளும்.

(4) பின்வருவன நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்-

(அ) இச்சட்டத்தின்கீழ் ஆணைக்குழுவின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளை பிரயோகிப்பதில், புரிவதில் மற்றும் நிறைவேற்றுவதில் அதனால் உறப்பட்ட ஏதேனும் செலவினத்தைக் கொடுத்துத் தீர்ப்பதற்கு தேவைப்படுத்தப்படுகின்றவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்;

(ஆ) பெண்களின் உரிமைகள் விடயத்துக்கு ஏதேனும் விதிவிலக்கான அல்லது முதன்மையான பங்களிப்பை ஏற்றங்கீகரித்து எவரேனும் தனியாளுக்கு அல்லது ஒழுங்கமைப்புக்கு எவையேனும் தண்ணளிக் கொடுப்பனவுகளைச் செய்வதற்கு ஆணைக் குழுவினால் அதிகாரமளிக்கப்படுகின்றவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்; அல்லது

(இ) இச்சட்டத்தினால் அல்லது இச்சட்டத்தின்கீழ் நிதியத்திலிருந்து செலுத்தப்படுவதற்கு தேவைப்படுத்தப்படுகின்றவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்.

*ஆணைக்குழு அதன் பணத்தை முதலீடு செய்யலாம்*

**33.** ஆணைக்குழுவானது, உடனடியாகத் தேவைப்படாத ஆணைக்குழுவின் பணங்களை அது தீர்மானிக்கின்றவாறான அத்தகைய முறையில் முதலீடு செய்யலாம்.

*கணக்காய்வும் கணக்குகளும்*

**34.** (1) ஆணைக்குழுவானது, ஆணைக்குழுவின் வருமானமும் செலவினமும், சொத்துக்களும் பொறுப்புக்களும் மற்றும் வேறு எல்லாக் கொடுக்கல்வாங்கல்களும் பற்றிய முறையாக கணக்குகள் வைத்திருக்கப்படுவதனைச் செய்வித்தல் வேண்டும்.

(2) ஆணைக்குழுவின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

(3) பகிரங்க கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் பற்றிய கணக்காய்வு தொடர்பான அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள், ஆணைக்குழுவின் கணக்குகளின் கணக்காய்வுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

பாகம் V

## பொது

**35.** (1) அமைச்சர், ஆணைக்குழுவுடனான கலந்தாலோசனையுடன் இச்சட்டத்தினால் விதித்துரைக்கப்படுவதற்கு தேவைப்படுத்தப்பட்ட கருமங்கள் தொடர்பில் அல்லது எக்கருமங்கள் தொடர்பில் ஒழுங்குவிதிகள் ஆக்கப்படுவதற்கு அதிகாரமளிக்கப் படுகின்றதோ அக்கருமங்கள் தொடர்பில் ஒழுங்குவிதிகளை ஆக்குதல் வேண்டும். ஒழுங்குவிதிகள்

(2) ஓராம் உட்பிரிவினால் அளிக்கப்பட்ட தத்துவங்களின் பொதுமைக்குப் பங்கமின்றி, பின்வரும் எல்லாம் தொடர்பிலும் அல்லது பின்வருவனவற்றுள் எவைதொடர்பிலும் ஒழுங்குவிதிகள் ஆக்கப்படலாம்:-

(அ) ஆணைக்குழுவானது, 17 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட குழுவை எந்த முறையில் நியமிக்கவேண்டுமோ அந்த முறையை விதித்துரைத்தல்;

(ஆ) 17 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட குழுவுக்கு நியமிக்கப்பட்ட ஆட்களின் தேவைப்படுத்தப்பட்ட தகைமையை விதித்துரைத்தல்;

(இ) 17 ஆம் பிரிவின் நியதிகளின்படி நடாத்தப்படுகின்ற விசாரணையொன்று அல்லது புலனாய்வு தொடர்பாக குழுவினால் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கை முறையை விதித்துரைத்தல்;

(ஈ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி ஆணைக்குழுவினால் பெறப்பட்ட முறைப்பாடுகள் மற்றும் இன்னல்கள் தொடர்பாக கடைபிடிக்கப் படவேண்டிய பொறிமுறைகளை அல்லது செயன் முறைகளை அடையாளம் காணுதல்;

(உ) வெவ்வேறு வகுதியினர்களாகவும் அந்தஸ்துடையவர்களாகவும் உள்ள பெண்களை அடையாளம் காணுதல் மற்றும் முறையான வகுதி அல்லது

அந்தஸ்துக்கு சமத்துவம் மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு கடைபிடிக்கப்படவேண்டிய வழிமுறைகளை விதித்துரைத்தல்;

(ஊ) வேலைக்கட்டமைப்புக்கு இசைந்தொழுகின்ற முறையை குறித்துரைக்கின்ற இயைபான அதிகாரிகளுக்கு வழிகாட்டுநெறிகளை வழங்குதல்;

(எ) தேவைப்படுத்தப்பட்ட பெண்களின் பொருளாதார வலுவூட்டுகை மற்றும் வேலைக்கட்டமைப்பின்கீழ் எய்தப்படும் இலக்குகள் உள்ள இடப்பிரதேசங்களை விதித்துரைத்தல் மற்றும் தேசிய பொருளாதாரத்தில் பெண்களின் ஐம்பது சதவீதத்துக்கு குறையாத பங்களிப்பை உறுதிப்படுத்துதல்;

(ஏ) பின்வருவனவற்றுக்கான வலுவூட்டுகை முன்னெடுப்புகளை மேம்படுத்துவதற்கு பொறிமுறைகளைத் தாபித்தல்:-

(i) அங்கவீனத்துடனான பெண்களுக்கு விசேட கருத்திற்கொண்டுள்ள பெண்களின் சமுக, பொருளாதார வலுவூட்டுகைக்காக;

(ii) வன்முறை, பலவந்தப்படுத்தப்பட்ட தொழிலாள், ஆட்கடத்தல் மற்றும் சுரண்டுதல் போன்ற எல்லா வடிவங்களிலிருந்தும் சிறுமிகளை பாதுகாத்தல்;

(iii) பால்நிலை அடிப்படையிலான வன்முறை மற்றும் பாரபட்சத்தினை குறைப்பதனைப் பெற்றுக் கொள்ளுவதற்காக நீதிமுறை செயல்முறையின் அணுக்கத்துக்கு பெண்களுக்கு உதவுவதற்காக ஆதரவுசெய்யும் முறைமைகளுக்காக;

(ஐ) பெண்களின் உரிமைகளை உறுதிப்படுத்துவதற்கு தனிப்பட்ட ஆட்கள் மற்றும் வேறு அரசசார்பற்ற நிறுவனங்களினால் கடைபிடிக்கப்படவேண்டிய

கொள்கைகள் மற்றும் செயன்முறைகளை விதித்துரைத்தல்; அத்துடன்

(ஓ) இச்சட்டத்தின் கோட்பாடுகளையும் ஏற்பாடுகளையும் நிறைவேற்றும் அல்லது அவற்றுக்கு பயன்கொடுக்கும் நோக்கத்துக்காக.

(3) அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒவ்வொரு ஒழுங்குவிதியும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும் என்பதுடன் அதன் வெளியீட்டுத் தேதியன்று அல்லது அதன்கண் குறித்துரைக் கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(4) அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒவ்வொரு ஒழுங்குவிதியும் அது வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பின்னர் வசதியானளவு விரைவாக, அங்கீகாரத்துக்காக பாராளுமன்றத்தின் முன்னர் கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஒவ்வொரு ஒழுங்குவிதியும் அத்தகைய அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து ஆனால், அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) ஏதேனும் ஒழுங்குவிதி எத்தேதியன்று அவ்வாறு ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுகின்றதோ அத்தேதி பற்றிய அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

*இச்சட்டத்தின்கீழ் அமைச்சரின் விசேட தத்துவம்*

**36.** (1) அமைச்சர் அரசாங்கத் திணைக்களமொன்றாக இலங்கைப் பெண்கள் பணியகத்தை தரமுயர்த்துவதற்கு அவசியமான படிமுறைகளை எடுத்தல் வேண்டும்.

(2) பிரிவு 35இன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியுடன் இணங்கியொழுகுவதற்கு தவறுகின்ற எவரேனும் ஆள், அத்தகைய இணங்கியொழுகாமைக்கான காரணங்களை எழுத்தில் அமைச்சருக்கு அறிவிப்பதற்கு ஆளாதல் வேண்டும். தரப்பட்டுள்ள காரணங்களுடன் அமைச்சர் திருப்திப்படின், அமைச்சர் இணங்கியொழுகுதலுக்கான காலப்பகுதியை நீடிக்கலாம்.

(3) இரண்டாம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட நீடித்த காலப்பகுதியினுள் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் இணங்கியொழுகப்படதாவிடத்து, அமைச்சர் குழுவுக்கு மத்தியஸ்தம் மூலம் தீர்ப்பதற்கு கருமத்தை ஆற்றுப்படுத்தலாம்.

(4) இருபத்தோராம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ), (ஆ), (இ) மற்றும் (ஈ) என்னும் பந்திகளின் ஏற்பாடுகள் (3) ஆம் உட்பிரிவின் கீழ் மத்தியஸ்தத்துக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட கருமமொன்றுக்கு விண்ணப்பித்தல் வேண்டும்.

ஆண்டறிக்கை

**37.** ஆணைக்குழுவானது, ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியிலும் அதற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட எல்லாக் கருமங்களும் பற்றிய ஒரு நிரல், ஒவ்வொரு கருமமும் தொடர்பில் ஆணைக் குழுவின் விதப்புரைகளுடன் சேர்த்து அவைதொடர்பில் எடுக்கப்பட்ட நடவடிக்கை அடங்கிய அறிக்கையொன்றை பாராளுமன்றத்துக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

ஆணைக்குழுவின் தத்துவங்கள், கடமைகள் அல்லது பணிகளைக் கையளித்தல்

**38.** ஆணைக்குழுவானது, ஆணைக்குழு வினைத்திறனாக பணியாற்றுவதற்கு தேவைப்படுத்தப்படுகின்ற அளவுவரை அதன் தத்துவங்கள், கடமைகள் அல்லது பணிகளுள் எவற்றையும் ஆணைக்குழுவுக்கு உதவுவதற்கு நியமிக்கப்பட்ட எவரேனும் அலுவலருக்கு அல்லது அலுவலர்களுக்கு கையளிக்கலாம் என்பதுடன் அத்தகைய தத்துவங்கள் எந்த ஆளுக்கு அல்லது ஆட்களுக்கு அவ்வாறு கையளிக்கப்படுகின்றதோ அந்த ஆள் அல்லது ஆட்கள் ஆணைக்குழுவின் பணிப்புக்கும் கட்டுப்பாட்டுக்கும் அமைய அத்தத்துவங்களைப் பிரயோகிக்கலாம். இப்பிரிவின்கீழ் செய்யப்பட்ட ஏதேனும் கையளிப்பு ஆணைக்குழுவினால் மீளப்பெறப்படலாம்.

ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல் வேண்டும்

**39.** ஆணைக்குழுவின் உறுப்பினர்களும் ஆணைக்குழுவுக்கு உதவுவதற்கு நியமிக்கப்பட்ட அலுவலர்களும் ஊழியர்களும் (19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவையின் கருத்தினுள்ளும் அதன் நோக்கங்களுக்காகவும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் இச்சட்டத்தின் கீழ் நடாத்தப்பட்ட ஒவ்வொரு விசாரணையும் அல்லது புலனாய்வும் அக்கோவையின் கருத்தினுள் நீதிமுறை நடவடிக்கையாகக் கருதப் படுதலும் வேண்டும்.

**40.** இரண்டாயிரத்து இருபத்திமூன்றாம் ஆண்டின் 9 ஆம் இலக்க, ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் "இலஞ்சம் அல்லது ஊழல் தொடர்பிலான தவறுகள்" எனும் தலைப்பின்கீழ் பாகம் III இன் அத்தியாயம் I இன் ஏற்பாடுகள் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் அது தொடர்பிலும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடமையாகும் எனக் கருதப்படுதல் வேண்டும்.

*2023 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க ஊழல் தொடர்புச் சட்டத்தின் ஏற்பாடுகள்*

**41.** (1) இச்சட்டத்தின்கீழ் ஆணைக்குழுவின் மீது சுமத்தப்பட்ட அல்லது அதற்கு அளிக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தை, கடமையை அல்லது பணியை பிரயோகிப்பதில், புரிவதில் அல்லது நிறைவேற்றுவதில் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட எதற்கும், குடியியலாயினுஞ்சரி அல்லது குற்றவியலாயினுஞ்சரி பொறுப் பொன்று ஆணைக்குழுவின் எவரேனும் உறுப்பினருக்கு அல்லது அலுவலருக்கு அல்லது அத்தகைய உறுப்பினரினால் அல்லது அலுவலரினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலருக்கு சார்ந்ததாதலாகாது.

*துடர்ச்சி அல்லது குற்றவழக்கிலிருந்தான ஆணைக்குழுவின் உறுப்பினர்களினதும் ஆணைக் குழுவின் அலுவலர்களினதும் சேவையாளர்களினதும் பாதுகாப்பு*

(2) ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னர் ஆணைக்குழுவினால் அல்லது அதற்கெதிராக கொணரப்பட்ட ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் ஆணைக்குழுவினால் உறப்பட்ட ஏதேனும் செலவு நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் ஆணைக்குழுவுக்கு செலுத்தப்பட்ட அல்லது அதனால் அறவிடப்பட்ட எவையேனும் செலவு தொகைகள் நிதியத்துக்கு வரவுவைக் கப்படுதலும் வேண்டும்.

(3) இச்சட்டத்தின்கீழ் அல்லது ஏதேனும் தோதான சாதனத்தின்கீழ் அல்லது ஆணைக்குழுவின் பணிப்பின்மீது அத்தகைய எவரேனும் ஆளினால் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்பட்ட ஏதேனும் செயல் தொடர்பில் ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னர் அவருக்கெதிராக கொணரப்பட்ட ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அவரினால் உறப்பட்ட ஏதேனும் செலவு, அச்செயல் நல்லெண்ணெத்துடன் செய்யப்பட்டது என நீதிமன்றம் தீர்த்தால், அத்தகைய செலவு அத்தகைய துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அவரினால் அறவிடப்பட்டா லொழிய நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

**42.** (1) ஆணைக்குழுவானது, இச்சட்டத்தின்கீழ் எக்கருமங்களுக்காக விதிகள் ஆக்கப்படுவதற்கு தேவைப்படுத்தப்படுகின்றதோ அல்லது அதிகாரமளிக்கப்படுகின்றதோ அவ்வெல்லாக் கருமங்கள் தொடர்பிலும் விதிகளை ஆக்கலாம். இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஒவ்வொரு விதியும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும். ஆணைக்குழுவின் விதிகள்

(2) ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்ட ஒவ்வொரு விதியும் அமைச்சரினால் அங்கீகரிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய விதிகளும் அத்தகைய அங்கீகாரம் பற்றிய அறிவித்தலும் மூன்று மாதங்களை விஞ்சாத நியாயமான காலப்பகுதியொன்றினுள் வர்த்தமானியில் வெளியிடப்படுதலும் வேண்டும்; அத்துடன் அதன் வெளியீட்டுத் தேதியன்று அல்லது அதன்கண் குறித்துரைக்கப் படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(3) ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்ட ஏதேனும் விதி எந்நேரத்திலும் அதே முறையில் திருத்தப்படலாம், அதற்கு எதுவும் சேர்க்கப்படலாம், வேறுபடுத்தப்படலாம் அல்லது ஒழிக்கப்படலாம்

**43.** இச்சட்டத்தில், சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப் படுத்தினாலொழிய- பொருள்கோடல்

''அமைச்சர்'' என்பது, அரசியலமைப்பின் 44 ஆம் அல்லது 45 ஆம் உறுப்புரையின்கீழ் எந்த அமைச்சருக்கு இச்சட்டத்தை நடைமுறைப்படுத்தல் குறித்தளிக்கப் பட்டுள்ளதோ அந்த அமைச்சர் எனப் பொருள்படும்;

''மத்தியஸ்தர்களுக்கான நடத்தைக்கோவை'' என்பது, இச்சட்டத்தின்கீழ் அமைச்சரினால் விதித்துரைக் கப்படுகின்றவாறான மத்தியஸ்தர்களுக்கான நடத்தைக்கோவை எனப்பொருள்படும்;

''ஆள்'' என்பது, ஏதேனும் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்படாத ஆட்கள் குழுவையும் தனிப்பட்ட ஆளொருவரையும் உள்ளடக்கும்;ஆனால் சட்டவாக்க அல்லது நீதித்துறை குழுக்கள் உள்ளடங்குதலாகாது;

''விதித்துரைக்கப்பட்டது'' என்பது, இச்சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின்மூலம் விதித்துரைக்கப் பட்டது எனப் பொருள்படும்;

"தனிப்பட்ட ஆள்" என்பது, அரசு அல்லது அரசின் ஓர் உறுப்பு அல்லது ஊழியர் அல்லாத எவரேனும் ஆள் எனப் பொருள்படும் என்பதுடன் எவரேனும் கூட்டிணைக் கப்பட்ட ஆளை உள்ளடக்கும்; அரசு, அரசாங்கம் அல்லது ஏதேனும் பகிரங்கக் கூட்டுத்தாபனம் அல்லது உள்ளூரதிகாரசபை அத்தகைய கூட்டிணைக்கப்பட்ட ஆளின் ஐம்பது சதவீதத்துக்குக் குறைந்த பங்குகளை வைத்திருக்கும் அல்லது அவரிடத்தில் அக்கறைகளைக் கொண்டிருக்கும் எவரேனும் ஆள் எனப் பொருள்படும்; அத்துடன்

"பெண்களின் உரிமைகள்" என்பது, கல்வி மற்றும் தொழிலை அணுகுவதில் பெண்களுக்கான சமத்துவ வாய்ப்புகளை மேம்படுத்துதல் மற்றும் பாலியல் தொல்லைகளி லிருந்தான சுதந்திரத்தை உறுதிப்படுத்துதல் மற்றும் கௌரவத்துடன் பெண்கள் வாழ்வதனை இயலச் செய் கின்ற பெண்களுக்கு எதிரான எல்லா வடிவங்களி லுமான வன்முறைகள் உள்ளடங்கலாக அரசியலமைப் பின் உறுப்புரை 12 இலும் பெண்களுக்கெதிரான எல்லா வகையினதான ஓரங்காட்டுதலை ஒழித்தல் மீதான சமவாயத்திலும் விபரிக்கப்பட்ட இலக்குகளில் எடுத்துக்கூறப்பட்ட சமத்துவம் மற்றும் பாரபட்சமின்மைக் கான பெண்களின் உரிமைகள் எனப் பொருள்படும்.

ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

**44.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.